Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 06 | 22-07-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 154

### வால்வெள்ளி மோதலில் வியாழனுக்கருகே தூசி

களனி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வியாழன் கிரகத்தில் சமீபத்தில் இடம் பெற்றமோதலின் பலனாக இரண்டு பாரிய தூசிப் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளனர். தொலைக்காட்டித் திரையில் இந்தத் தூசிக்கோளங்களை அவதானிக்க முடிந்தது. வியாழன் கிரகத்தின் மீதுவால் வெள்ளி மோதியதன் விளைவாக இந்தத் தூசிக் கோளங்கள் ஏற்பட்டுள்ளன. கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டத்தரிப்பில் கடும் மோதல்; ராணுவம்இழப்புடன்திரும்பியது

## ஆறுமணிநேர உக்கிர சண்டை

(யாழ்ப்பாணம்)

**மாதகல், விளான் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பண்டத்தரிப்பு ஊடாக முன்னேற மேற்கொண்ட முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. சுமார் ஆறு மணிநேரம் இடம்பெற்ற கடும் மோதலைத் தொடர்ந்து இழப்புக்களுடன் இராணுவம் தனது நிலைகளுக்குத் திரும்பியது.**

நேற்று அதிகாலை மேற்படி முகாம்களில் இருந்து பண்டத்தரிப்பு வரை இராணுவத்தினர் முன்னேறி வந்தனர் இவர்களுக்கு ஆதரவாக சிறிலங்கா விமானப் படை உலங்கு வானூர்தி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தவாறு பாதுகாப்பு அளித்தது.

இதைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பு மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலை அடுத்து அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்து சென்றனர்.

சங்கானைப் பகுதியிலும் அதையொட்டிய வேறிடங்களிலும் உள்ள பாடசாலைகள். வணக்க ஸ்தலங்கள் ஆகியவற்றில் பாதுகாப்புக் கருதி தஞ்சமடைந்திருந்த பொது மக்கள் நேற்று மாலை மீள தமது இடங்களை நோக்கித் திரும்பினார்கள்.

வடலியடைப்பு, சித்தங்கேணி, பிரான்பற்று, பத்திரி

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு போராளி வீரச்சாவு

பண்டத்தரிப்புபகுதிநோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று

(11 ஆம் பக்கம் பார்க்க)



வீரவேங்கை வண்ணவேல்

## ஷெல் தாக்குதலுக்கு ஒருவர் பலி 12பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று அதிகாலை பண்டத்தரிப்பு பகுதியை நோக்கி வந்ததை அடுத்து, மாதகல், அளவெட்டி, இளவாலைப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர், பொதுமக்களின் குடியிருப்புக்

(11ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது நாளாக வல்வையில் குண்டு வீச்சு

### - ஒருவர் பலி; நால்வர் காயம்

(வடமராட்சி)

சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் இரண்டாவது நாளாக நேற்று வடமராட்சிப் பகுதி மீது மேற்கொண்ட மூர்க்கத்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் நால்வர் படுகாயமடைந்தனர். இதனால் பத்திற்கு மேற்பட்ட மீன்பிடி றோலர்கள் மூழ்கடிக்கப்பட்டதுடன் பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 8மணியளவில் வல்வெட்டித்துறை, காட்டுப் புலம், பொலிகண்டிப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்ற உலங்கு வானூர்தி ஒன்று மீண்டும் அப்பகுதிக்கு வந்து கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

காலை 11.30 மணியளவில் இதே பகுதிகளுக்கு வந்த இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் நண்பகல் 2 மணிவரை எட்டுக் குண்டுகளை வீசின. ஆதிகோவிலடியில் வீழ்ந்து வெடித்த குண்டினால் எட்

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்குதல் ஆஸ்பத்திரி சேதம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை உலங்கு வானூர்தியின் வேட்டுக்கு இலக்காகி வைத்தியசாலை வார்ட் கூரைப் பகுதி சேதமடைந்தது.

இவ் வைத்தியசாலைக்கு மேலாக சென்ற இவ் உலங்கு வானூர்தி சுட்டபோது விடுதியின்கூரைப்பகுதி சேதமடைந்தது. இதனையடுத்து நோயாளிகள் பீதியடைந்தனர். கடமையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களும் பதற்ற நிலையில் காணப்பட்டனர்.

## உடைந்த தேர்தல் மேடை; அப்புறப்படுத்த தடை

(கொழும்பு)

இரகசிய பொலிஸ் குழுவினர் கொழும்பில் இருந்து செல்லும் வரை உடைந்த தேர்தல் மேடையை சீர் செய்வதற்கு பொலிசாருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயுதம் தரித்த விசேட பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் உடைந்த தேர்தல் மேடையை காவல் புரிவதாகவும் இதுகுறித்து பல சர்ச்சை எழுந்து இருப்பதாகவும் தெரிகின்றது.

## வானமே வீழ்ந்தாலும் மக்களைச் சந்திப்பேன்

(கொழும்பு)

மேடை மட்டும் அல்ல வானம் இடிந்து விழுந்தாலும் தான் கொலன்ன மக்களைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது என்றும் தான் ஒரு போதும் இம் மக்களை மறக்க மாட்டேன் எனவும் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று மேடை உடைந்து விழுந்த பின்னர் தன்னைச் சந்தித்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

கொலன்ன கூட்டத்தில் இத்தனை இடர்களின் பின்னரும் கலந்து கொண்ட மக்களுக்கு விசேட நன்றியை தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேடை சரிந்ததைத்தொடர்ந்து கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாகவும் பின்னர் ஜனாதிபதி தெரணியகல கூட்டத்திற்கு சென்று மீண்டும் கொலன்ன

(11ஆம் பக்கம் பார்க்க)

## கசங்கிய உடையுடன் காணப்பட்ட ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது மேடை சரிந்து வீழ்ந்ததில் ஜனாதிபதி காயமடையவில்லை எனக் கூறப்பட்ட போதும் அவர் மீது சேறு பூசப்பட்டும் உடை கசங்கிய நிலையிலுமே காணப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது. அடுத்த கூட்டத்திலும் அவர் இவ்வாறே காணப்பட்டதாக பத்திரிகையாளர் கூறுகின்றனர்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுஜன ஐ. முவுக்கே வெற்றிவாய்ப்பு அதிகம்

### கருத்துக் கணிப்பீடு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியே இம்முறை பொதுத் தேர்தலில் வெற்றியீட்டும் வாய்ப்பு அதிகரித்துவருவதாக பதினேழு தேர்தல் மாவட்டங்களில் எடுக்கப்பட்ட கணிப்பீடுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இரகசிய புலனாய்வுத்துறையினர், அரசாங்க அதிகாரிகள் உள்ளடங்கிய முப்பத்தி எட்டுப்பேர் மேற்கொண்ட இத் தேர்தல் கணிப்பீடு சுமார் இருவாரங்கள் இடம்பெற்றதாகவும், இதன் போது பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்தித்து கருத்துக்களை அறிந்துகொண்டனர் எனவும் தெரியவருகின்றது. இவ்வாறு பொதுஜன ஐக்கிய

(11ஆம் பக்கம் பார்க்க)

## லக்கி அல்கம தலைமையில் வடக்கு படை நடவடிக்கை

(கொழும்பு)

முப்படைகளுக்கும் கட்டளையிடும் அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என சிறிலங்கா பாதுகாப்பு உயர் பீடத்தினர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு சிபார்சு செய்துள்ளனர் இவர் வடக்கில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக எடுக்கவென திட்டமிடப்பட்டுவரும் பெரும் படை நடவடிக்கைக்கு தலைமை வகிப்பார் எனவும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**SPOKEN ENGLISH**

SPOKEN ENGLISH WITH GRAMMAR கற்பிக்கப்படுகிறது. ஆரம்பம் 23-07-94, நேரங்கள் வேண்டியபடி தரப்படும். V.N.Kandasamy A.i.B Parti (London) Inter (London) Dip-in English. 87-திருநெல்வேலி றோட் (றயில்கடவைக்குச்சமீபமாக) கொக்குவில். (8890)

**ஜோதிடம்**

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, அதிர்ஷ்டகரமான பெயரமைக்க, உங்கள் எதிர்காலப்பலனறிய - V. A.சிவராசா சோதிடர் (வேலணை)- 152 B அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (8892)

**மிருதங்கம்**

கைவசம் புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.சாதம் போடுவதற்கு 100 ரூபா மட்டும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1, நாவலர் றோட் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (8854)

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து உடன் கண்ணாடி வழங்கப்படும். இல. 288 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8864)

**மகாதேவா ஜோதிடம்**

குறிப்பு, வீடு, கை பார்த்தல் குறிப்பு எழுதுதல்மற்றும் சகல ஜோதிட ஆலோசனைகளுக்கும் ஜோதிடரைத் தினசரி 140 செல்லர் வீதி, கள்ளியங்காட்டுச் சந்தைக் கருகாமையில் சந்திக்கலாம். (8873)

**வால்வெள்ளிமோதலும் வியாழ ராகு சேர்க்கையும்**

குருசண்டாள தியயோகத்துடன் இன்றுவரை வால்வெள்ளிமோதல் உடனடித்தாக்கம் பூமியில் ஏற்படாவிட்டாலும், படிப்படியாக நான்கு வருடங்களுக்கு பூமியதிர்ச்சி, இயற்கையழிவுகள் போன்ற பாரிய விளைவுகளை உண்டாக்கும். சத்யா-கட்டுடை (8879)

**பாலமுருகன் வர்ணப்படம்**

தமிழீழ ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு பாலமுருகன் பல வர்ணப்படம் அன்பளிப்பாக, மில்க்வைற் சலவைப் பவுடர் 450 கிறாம் வாங்குபவர்கட்கு வழங்கப்படுகிறது. ''மில்க்வைற்''

(சி-9961)

**விற்பனைக்கு**

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 6 பரப்புக்காணியும் 5 அறையும் வீடுசேர்ந்த கிணறு பயன்தரும் மா, பலா, தென்னை, தேசி நிந்தமாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சி ஏகாம்பரநாதன் (கிளாக்கர்) மேல் மாடி கண்டி வீதி கொடிகாமம் (சி-9967)

15-7-94 அன்று மட்டுவிலில் இருந்து யாழ் - செல்லும் வழியில், சிங்கர் கத்திரிக்கோல் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், யாழ். ஆஸ்பத்திரி முன்பாக உள்ள கௌரி தொழிலகத்திலோ அல்லது -உஷா கம்பனியிலோ - சிங்கர் கம்பனி சாவகச்சேரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும் (சி-9957)

## நினைவு கூருகின்றோம்...

### 22-07-1994...

1987-ம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

★ **கீர்த்தி** (சாமித்தம்பி புவிராஜகீர்த்தி-தம்பிலுவில்-அம்பாறை)

மட்டு-ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.விவே** (சாமித்தம்பி உதயச்சந்திரன்-ஆரையம்பதி-01-மட்டு)

யாழ்-கோட்டைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**குமா** (சுப்பையா தனபாலசிங்கம் - தண்ணீர்த்தாங்கியடி, முருங்கன்-மன்னார்)

1988-ம் ஆண்டு மட்டு-நெல்லிக்காட்டுப் பகுதியிற் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**செந்தூரன்** (ஆறுமுகம் கணேசமூர்த்தி-மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை-மட்டு)

**முருகன்-பசிலன்** (சாமித்தம்பி முருகமூர்த்தி-கொக்கட்டிச்சோலை-மட்டு)

**சைமன்** (வீரக்குட்டி நேசகுமார்-இலுப்பையடிச் சேனை, செங்கலடி-மட்டு)

1989-ம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். ஆஷா-ஈசன்** (வல்லிபுரம் விமலேஸ்வரன்-சரசாலை வடக்கு-சாவகச்சேரி)

திருமலை-ஆலங்கேணி, சுற்றிமுறித்தான் தீவுப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

கிளிநொச்சியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுமி, இரணைமடுச் சந்திக்கு அண்மையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு ஆனையிறவு-குறிஞ்சாத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**தசரதன்-தாகன்** (செல்லையா குமாரவேல்-குருநகர்-யாழ்)

கிளி-பரந்தன், முரசுமோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.சிட்டன்** (வேலாப்போடி தர்மலிங்கம்- தன்னாமுனை-மட்டு)

**டொா** (வல்லிபுரம் யோகேஸ்வரன்-வவுனியா)

கிளி - மாவட்ட மகளிர் பிரிவுப்பொறுப்பாளர்

**கப்டன் பிரபா** (தாரணி திருநீலகண்டன்-மயிலிட்டி)

**2-ம் லெப்.தங்கப்பா** (வீரகுலசிங்கம் செல்வநாயகம்- செல்வநாயகம் வீதி-தொண்டமானாறு)

**முத்து** (தெய்வேந்திரம் மகேந்திரன் - காமாட்சி கோயிலடி, காரைநகர்-யாழ்)

யாழ்-வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் தேவன்** (சின்னத்தம்பி மகாதேவன்-ஒதியமலை, நெடுங்கேணி-மணலாறு)

கிளி-பரந்தன் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெயதிய,

**சீலன்** (மெய்யப்பா தர்மரெட்ணம்-மன்னார்)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**பிறேம்நாத்** (சீனிவாசகம் கௌரிநாதன்-திருக்கோயில்-அம்பாறை)

**இந்திரன்** (சண்முகம் பாஸ்கரன்-வீசம்கேணி வீதி, கிரான்-மட்டு)

**2-ம் லெப்.சண்** (கிருஷ்ணசாமி கணேஷ்-றிக்லேன் டிவிசன்-மடுக்கல்)

**லெப்.அசோக்** (வைத்திலிங்கம் கணேஸ்குமார்-கண்டி வீதி-மாங்குளம்)

**லெப்.ஜேம்சன்** (சாந்தையா ராமு-இந்துபுரம், முறிகண்டி-கிளிநொச்சி)

**மேஜர் ரெட்ணராஜ்-ரெட்டி** (தம்பிப்பிள்ளை அந்தோனிதாஸன்-மருத்துவமனை வீதி-மன்னார்)

**லெப்.விஜயன்** (வேலுப்பிள்ளை மாரிமுத்து-கொட்டடி-யாழ்)

**லெப்.திலக்** (சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்-ஆதி கோயிலடி-வல்வெட்டித்துறை)

**லெப்.அன்பன் மாஸ்ரர்-சிறீ அப்பா** (செ.முருகராசா சிறிதர்-தீருவில்ஒழுங்கை-வல்வெட்டித்துறை)

**2-ம் லெப்.எழில்** (சந்திரசேகரம் சசிதரன் மயிலங்கூடல், இளவாலை-யாழ்)

**சிவானி** (றோகினி சண்முகநாதன்- பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு-யாழ்)

**வில்சன்** (வேலுப்பிள்ளை சந்திரகுமார்-வடலியடைப்பு, பண்டத்தரிப்பு-யாழ்)

**கைலன்** (அரியரட்ணம் குசந்தன் - வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை-யாழ்)

**நிஷாந்தன்** (அருளானந்தம் யூட் அன்ரனி-நெடுந்தீவு மத்தி-யாழ்)

**மணிவாசன்** (கணேசநாதன் ஜனார்த்தனன்-மாவீரர் வீதி, இணுவில் கிழக்கு-யாழ்)

**சங்கன்** (சுப்பிரமணியம் கருணாநிதி-சிவன்கோயிலடி-எழுதுமட்டுவாள்)

**சிவமூர்த்தி** (மகாலிங்கம் சதீஸ்வரன்-கௌரிவாசா, 2-ம் வட்டாரம்-புங்குடுதீவு-யாழ்)

வவுனியா-சூடுவெந்தபுலவில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**லெப்.பாண்டியன்** (செல்லையா சிவதாஸ்-வேப்பங்குளம்-வவுனியா)

**ஜீவா** (அஞ்சரன் மேகன்-கரடிப்பூவல-புத்தளம்)

1992-ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் எமைப் பிரிந்த,

**நக்கீரன்** (சங்கரலிங்கம் செந்தில்குமரன்-நாயன்மார்கட்டு-யாழ்)

திருமலை-சம்பூர் இலக்கந்தை, பாட்டாளிபுரம் பகுதிகளைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போது சிறிலங்கா இராணுவம் சுட்டதில் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த இளைஞன் பலி.

கிழக்கில் முஸ்லிம்களால் ஏற்பட்ட வன்செயல்களால் கொல்லப்பட்ட தமிழ்ச்சாரதியும் வாழைச்சேனையில் சடலங்களாக மீட்கப்பட்ட இருவரும்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-9959]

## அறிவித்தல்

### வேலணை பலநோ.கூ. சங்கம் (வ-து)

**வேலணை பலநோ. கூ. சங்க அங்கத்தவர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளருக்கான கலந்துரையாடல் 23-07-94இல்**

தமிழீழ பொது நிர்வாக சேவைப் பகுதியினரால் 23-07-94 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடாத்தப் படவிருக்கின்ற மேற்படி கலந்துரையாடலில் சங்கத்தின் சகல அங்கததவர்கள், கிளைக்குழுக்களின் உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொ, மாசிலாமணி. தலைவர், வே. செல்லத்துரை. செயலாளர்.

**வேலணை. பல நோ. கூ. சங்கம்.**

(சி-9966)

## 4-ம் ஆண்டு நினைவு நாள்



முன்னாள் கிளிநொச்சி மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்

**கப்டன் பிரபா**

**(திருநீலகண்டன் தாரணி)**

மயிலிட்டி

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 05 - 09 - 1969 | 22 - 07 - 1990 |

தற்போதைய முகவரி:
ஈஸ்வரி வாசா,
புலவனார் வீதி,
கல்வியங்காடு. (8868)

- குடும்பத்தினர்.

# சிறிலங்கா தேர்தல் வன்முறையின் பின்னணியில் இருப்பவர் யார்?

சிறிலங்காவின் தேர்தல் வரலாற்றில் வன்முறைகள் நடைபெறுவது சர்வசாதாரணமானது தான். ஆனால் இம்முறை முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்பதற்கு தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று இடம்பெற்ற நிகழ்வுகள் கட்டியம் கூறுகின்றன. எனலாம். தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதி நாளாகிய கடந்த ஜூலை 11-ம் திகதியன்று பல இடங்களிலும் வன்செயல்கள் இடம்பெற்றன.

களுத்துறை, இரத்தினபுரி, அனுராதபுரம், கண்டி, புத்தளம், மட்டக்களப்பு ஆகியன போன்ற பிரதான நகரங்களில் அதே தினத்தன்று இடம்பெற்ற சம்பவங்களில் மட்டும் சுமார் ஐம்பது பேர் வரையில் காயமடைந்துள்ளனர். வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் முதல் 48 மணி நேரத்தில் மட்டும் 93 தேர்தல் வன்முறை சம்பவங்கள் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் தாக்கப்பட்டும் இதில் ஏழு வாகனங்கள் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டுமுள்ளன எனத் தெரிய வந்துள்ள போதும் அன்றைய தினம் ஏற்பட்ட வன்செயல்களில் ஐந்துக்கும் அதிகமானவர்கள் மரணமடைந்துள்ளனர். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட இறுதித்தினத்தின் பின்னர் முதல் ஐந்து நாட்களில் மட்டும் 601 குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகவும், தேர்தல் கால வன்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா பகிரங்கமாகவே தெரிவித்து இருக்கின்றார்.

## பாதிப்புற்றோர் பழிவாங்கல்

இவ்வாறாக குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெறுவதற்கு காரணம் என்ன? இவற்றின் பின்னணியில் செயற்படும் சக்திகள் யாவை? இக் கேள்விகள் குறித்து பிரதானமான இரு கட்சிகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளைப் பரிமாறிக் கொள்கின்றன. வேட்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் தொண்டர்கள் இச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கின்ற போதும், குற்றச் செயல்களுக்கு இக்கட்சிகள் மட்டும் தான் காரணமாக இருக்கின்றன எனச் சொல்வதற்கு இல்லை. ஏனெனில் இரு கட்சிகளிலும் சம்பந்தப்பட்டவர்களைவிட வெளிச் சக்திகளின் ஈடுபாடும் இச் சம்பவங்களின் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. பதினேழு ஆண்டு கால ஐ.தே.க ஆட்சியின் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்பார்ப்புகள் முறியடிக்கப்பட்டு ஐ.தே.கவினர் புறக்கணிக்கப்பட்டவர்கள் இத்தகைய வன்முறைகளைத் தூண்டுவதற்கு காரணமாக இருப்பதற்கான வாய்ப்புக்களும் உண்டு. வன்முறைச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்ற களுத்துறை, புத்தளம், பலப்பிட்டியா, வென்னப்புவ, போன்ற பகுதிகள் கடந்த காலங்களில் ஐ.தே.கவின் கோட்டையாக விளங்கியுள்ளன என்பதைக் கவனத்தில் கொண்டு பார்க்கும் போது இதனை புறக்கணிக்க முடியாது போகலாம்.

மேலும் டி. பி விஜேதுங்காவின் தலைமைத்துவத்தின் கீழ் திட்டமிட்டு ஒதுக்கி ஓரம் கட்டப்பட்ட அரசியல் வாதிகள் சிலரின் ஆதரவாளர்களும், முன்னைய காலங்களில் கட்சியின் செல்லப் பிள்ளைகள் போல விளங்கி இப்போது விரும்பத்தகாதவர்களாக விடப்பட்டுள்ள ''பாதாள உலக கிரிமினல்கள்'' என்ற முத்திரை பதிக்கப்பட்டவர்களும் அவர்களின் சகபாடிகளும் இத்தகைய வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் இருப்பதாக நம்பப்படுகின்றது.

## வஞ்சம் தீர்க்கப்படும் பொலிசார்

எனினும் இத்தகைய சம்பவங்கள் - குற்றச் செயல்கள் அதிகரித்து வருகிறது என்பது மட்டும் நிச்சயமானது. இத்தகைய நேரத்தில் பொலிசார் எப்படி நடந்து கொள்கின்றனர் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும். எதிரணியினர் வெற்றி வாய்ப்பு பிரகாசமானதாக காணப்படும் இன்றைய தருணத்தை உணர்ந்து பொலிசார் ஓரளவுக்கு பக்கச் சார்பின்றி நடப்பதை பல இடங்களிலும் அவதானிக்க முடிவதாக கூறப்படுகிறது. எனினும் ஆளும் ஐ. தே. கவினருக்கு ஆதரவாக பொலிசார் செயற்பட்ட சம்பவங்களும் இல்லாமல் இல்லை. மேலும் பக்கச் சார்பின்றி நடுநிலைமையுடன் செயற்பட்ட பொலிசார் - பொலிஸ் அதிகாரிகள் திடீர் இடமாற்றங்களுக்கு இலக்கானதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இரத்தினபுரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வசந்த டி சில்வா மட்டக்களப்பிற்கு இடமாற்றம் பெற்றதும் களுத்துறை மாவட்டப் பிரதிப் பொலிஸ் அதிபர் டி. வி. சுமண சேகராவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜெகத் ஜெயவர்தனாவும் இடமாற்றம் பெற்றதும் இவ்வகையில் சுட்டிக் காட்டப்படத் தக்கதாகும். அத்துடன் வன்முறைச் சம்பவங்களின்போது ஐ. தே. கவிற்கு சாதகமாக செயற்பட்டவர்களுக்கு விசேடபடி அடிப்படையில் சம்பளம் வழங்குவதற்கு பொலிஸ்மா அதிபருக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடக் கூடியதாகும். இன்னும் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு என விசேட பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையில் இரகசிய பொலிஸ் உள்ளடங்கலாக நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேர்தல் தொகுதிகள் தோறும் அனுப்பப்பட்டுள்ளனர்.

## முகத்திரை கிழிந்தது

கொள்ளுப்பிட்டிய பகுதியில் கலைஞர்கள் மற்றும் இலக்கிய படைப்பாளிகள் மீது தாக்குதல் நடத்தியோரில் இருவர் சுற்றிவளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டதும், பிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் விசேடபொலிஸ் பிரிவைச் சேர்ந்த அதிகாரியான சாந்த கே. மென்டிஸ் என்றும், இவர் ஐக்கிய தேசியக் கட்சியில் 1993-ம் ஆண்டு 162701 அங்கத்துவ பத்திரத்தை பெற்றுக் கொண்டவர்என்பதுகுறிப்பிடத்தக்கது அடுத்தவர் மருதானையைச்சேர்ந்தகிராவிடகழகஇளஞ்செழியன். இவரும் ஐ. தே. க. செல்லப்பிள்ளையாக கருதப்படுபவர் ஆவார்.

## வன்முறையின் உச்சமாக உயிர்ப்பலிகள்

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரையில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இருவர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு உயிரிழந்தவர்கள் ஐ. தே. கட்சி ஆதரவாளர்கள் ஆவார்.

இவர்கள் கட்டுக்கடங்காத வன்முறைகளை மேற்கொண்டதினால் பொலிசாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணம் அடைந்தனர். இதே வேளை இம் மாதம் 17 -ம் திகதி கொழும்பு காலி வீதியில் இந்திய தூதுவரகம் முன்னால் சுட்டுக் கொல்லப்பட்ட கோடீஸ்வரன் லக்ஷ்மன் டி பொன் சேகாவின் கொலையும் தேர்தல் பழிவாங்கல் என்றே கருதப்படுகின்றது. இவர் பொதுஜனஐக்கிய முன்னணியின் ஆதரவாளர் ஆகும். இக் கட்சிக்கான தேர்தல் செலவிற்கு கணிசமான தொகையை இவர் கொடுத்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

**நிமலராஜன்**

இதேசமயம் ஐக்கிய தேசிய கட்சி இவரிடம் பணம் கேட்டதாகவும் இவர் கொடுக்க மறுத்து விட்டார் எனவும் தெரியவருகின்றது.

வன்முறையில் மரணமடைந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான களுத்துறையைச் சேர்ந்த ஆர். குணதிலகாவின் மரணச் சடங்குகள் தொடர்பாக பொலிசார் பெருமளவில் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பிடப்பட்ட சிறுதொகையினர் மட்டுமே இறுதி யாத்திரையில் பங்கு கொள்ளவேண்டுமெனவும், அவ்வாறு இல்லாதுவிட்டால் குடும்பத்தினர் அனைவரும் கொல்லப்படுவார்கள் எனவும் மிரட்டல்கள் விடுவிக்கப்பட்டுள்ளது. வன்முறையில் மரணமடைந்த மற்றுமொருவரின் பூதவுடலைப் புதைப்பதற்கான புதைகுழியை வெட்டிக் கொண்டிருந்த மறைந்தவரின் சகோதரரும் மற்றும் சிலரும் மயானத்திற்குவந்த பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். மறுநாள் அவர்கள் விடுவிக்கப்பட்டபோதும் அவர்களுக்கு கொலை மிரட்டல் எச்சரிக்கை விடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றைவிட சுமார் நூற்றி தொண்ணூற்றியாறு பேர் இது வரை வன்செயல்களில் பாதிக்கப்பட்டு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பதினைந்து பேரின் நிலை மிகவும் கவலைக்கு இடமானதாகவுள்ளது. ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஏழு வாகனங்கள் தீக்கிரையக்கப்பட்டுள்ளன. இதேவேளை தேர்தல் விதிகளுக்குப் புறம்பானது அல்லது முரணானது எனப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கு 96 சம்பவங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்புகார்கள் அநேகமானவை பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பாதிப்பதாக அம் முன்னணி செய்த முறைப்பாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரிமினல்களை நாடும் ஆளும் கட்சியினர்

இதே வேளை ஐக்கிய தேசிய கட்சி தனது தேர்தல் நடவடிக்கைகளுக்கு சுவரொட்டிகளை ஒட்டவும், கட்சிக்கொடிகளை கட்டும் பொறுப்புக்களை அவ்வப் பகுதி பாதாள உலக கிரிமினல்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியுள்ளனர். பிரதமர் ரணில்விக்கிரம சிங்கா தனது தேர்தல் சுவரொட்டியை ஒட்டுவதற்கும், ஏனைய தேர்தல் நடவடிக்கைகளுக்கும், பாதாள உலக கிரிமினலான சொத்தி உபாலியின் கையாளாக கடமை ஆற்றி, தற்பொழுது, அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வரும் ஒருவருக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கியுள்ளார் என தகவல்கள் வெளியாகின்றன. இந் நிலையானது தேர்தலுக்கு எவ்வளவு தூரம் வன்முறையாளர் உதவிநாடப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது.

இவை ஒரு புறமிருக்க பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள காலத்திலும், அதன் பின்னரும் வன்செயல்களில் ஈடுபடுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி திட்டமிட்டிருப்பதாகவும் இதனை எதிர் கொள்வதற்கு தமது கட்சியும் தயாராகி வருவதாகவும் ஐ.தே.க. வின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினிவிஜேசேகர கூறியுள்ளார். பொது ஜன ஐக்கிய முன்னணியானது தனது வெற்றிக்கு வன்முறைகளையே முழுவதுமாக நம்பியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியோ தேர்தலில்தமது கட்சி வெற்றியீட்டினால் எந்த ஒரு வன்முறையும் ஏற்படாது, என்றும், தமது கட்சி வன்முறைகளை எதிர்க்கிறது என்றும், வன்முறைகளுக்கு தூபமிடும் ஆதரவாளர்கள் எவரும் தமது கட்சியில் கிடையாது என்றும் மேடைக்கு மேடை முழக்கமிடுகிறது. அதே வேளை ஐ. தே. க. வன்முறை பற்றிக் கருத்துக் கூறுவது வன்முறையாளர்கள் வன்முறையில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக மறைமுகமாக விடுக்கப்படும் தூண்டுதலே எனவும், பொதுஜன ஐக்கிய முன்னணி குற்றம் சாட்டுகிறது.

## வன்முறை வெடிப்பது உறுதியாகிறது

எது எவ்வாறாயினும் இரு பிரதான அணிகளும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் குற்றச்சாட்டுகளிலிருந்து ஒரு விடயம் மிகத் தெளிவாகிறது. பாரிய வன்முறை ஒன்று கட்டவிழ்த்து விடப்படுவதற்கான ஓர் திரை மறைவு முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன என்பதுவே அவ் விடயம் ஆகும். எனினும் இக் கலவரம் கட்சிகளுக்கு இடையிலானதாக வெடிக்குமா? அல்லது இனவாரியான தாக்குதலாக நடக்குமா? அப்படியும் இல்லா விட்டால் மதச் சாயம் பூசப்பட்டதா என்பதை மட்டும் வரையறுப்பது இப்போது கடினமானதாகும்.

வெற்றியீட்டும் கட்சி தனது வெற்றிக் களிப்பை தோல்வியடைந்தவர்கள் மீது காட்டும் முயற்சியாக வன்முறை வெடிக்கலாம். அல்லது தேர்தலின் வெற்றி அல்லது தோல்விக்கான பழி தமிழர், முஸ்லிம்கள் வாக்குகள் மீது போடப்பட்டு மீண்டும் ஒரு 1983 உருவாக்கப்படலாம். அல்லது முன்னைய காலங்களைப் போல அல்லாது முஸ்லிம் காங்கிரஸ் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதைக் கருத்தில் கொண்டு முஸ்லிம்கள் மீது மீண்டும் ஓர் 1915 உருவாக்கப்படலாம். சில வேளை இம்மூன்றும் உள்ளடங்கலான வன்முறையாகவும் அமைந்து விடலாம். இதில் எது எப்படி நிகழக்கூடும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டியுள்ளது.

## கிரிமினல்கள் பாதுகாப்பு

இவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியில் இனவாதத்தை மட்டும் மையமாகக் கொண்டு செயல்படும் சக்திகள் சந்தர்ப்பம் இதுவெனக் கருதி இனவெறியைக் காட்டி வருகின்றன.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும்போதும் பயணம் மேற் கொள்வதற்கான விஷேட பாஸ்கள் தற்போது கொழும்பிலிருந்து ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான ஒரு முன்னேற்பாடே இது என்று எதிரணிக் கட்சிகள் கருதுகின்றன. ஊரடங்குச்சட்டத்தின் கீழ் எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடு விதித்து அராஜகம் புரிவதற்காக அரசாங்கம் தயாராகி வருகிறது என்பதே பிரதான குற்றச்சாட்டாக உள்ளது இதேசமயம் அரசியல் வாதிகளின் செல்லப்பிள்ளைகள்போல வளரும் பாதாள உலக கிரிமினல்களில்பலரும் ஐ. தே. க. வேட்பாளர்களுக்கான மேலதிக பாதுகாப்பு என்ற போர்வையில் ஆயுதங்களுடன் விடப்பட்டிருப்பதும் மேலும் சிலரிடம் சட்டபூர்வமற்ற வகையில் ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இத்தகையவர்களுக்கு பிரதான பொலிஸ்நிலையங்கள் உட்பட பாதுகாப்பு கூடிய பகுதிகளில் தங்குமிட வசதிகள் செய்யப்பட்டும் இருக்கின்றது.

இதேவேளை தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கிரிமினல்கள் சிலரை வெளியே கொண்டு வருவதற்கான முயற்

(11ஆம் பக்கம் பார்க்க)

# சினிமா

## ஒரு வன்மையான சாதனம்

**"திரைப்படங்களின் சமூகப் பாதிப்பு"எனும் தலைப்பிலான அறிவியற் கருத்தரங்கு கடந்த 13ஆம் திகதி இணுவில் அறிவியற் கழக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆற்றிய உரையின் முக்கிய பகுதி இங்கு பிரசுரமாகிறது.**

இயந்திரப்புரட்சிக்குப்பின்னர் வந்த தொழில்நுட்பங்களில் சினிமாவும்ஒன்று. திரைப்படம் என்பதுஓர் தொடர்புச் சாதனம். இது ஓர் சாதாரண தொடர்பல்ல. இது வெளியுலக தொடர்புச் சாதனம். இதில் ஒரு வெளிக்களப்பண்பு காணப்படுகிறது.

இது ஒரு தொழில் நுட்பச் சாதனமாக மாத்திரம் அல்லாது இது ஒரு தொடர்புச் சாதனமாகவும் அதிலும் ஒரு வெகுஜனத் தொடர்பு சாதனமாகவும்உள்ளது. இதனால் இதைப் பார்ப்பவர்கள் பல தரப்பட்டவர்கள்.

இதை கலைவடிவம் என்று சொல்கின்ற போது, மனித உணர்ச்சிக்கும், மனித கற்பனைக்கும் அது இணங்கவேண்டும்.

சினிமா வெறும்படம்அல்ல; அசைகின்ற படம். இதனை நாம் தமிழிலே பேசும்படம் என்கிறோம்.

அசைகின்ற படங்களுக்கு ஒரு வேகம் இருக்கின்றது. றீலில் 24 பிறேம் ஓடினால் தான் ஒரு முகம் தெரியும்.

பெரும்பாலான மக்கள் மத்தியில் சினிமா என்பது கதைப் படங்களே என்ற கருத்தே உள்ளது. இதைவிட வேறு வகையானபடங்களும்உண்டு. கல்வி சார்ந்த படங்கள், கல்வி போதிப்பதற்கென்றே எடுக்கப்படும் படங்களும் உண்டு.

இதில் இருக்கும் நடிப்பு ஏதோ ஒரு கதையின் பின்னணியில் அல்லது சம்பவத்தின் பின்னணியில் இருக்கும்.

கமராவின் கண் ஊடாகத் தான் பார்க்க வேண்டும். திரைப்படத்திற்குரிய முக்கியமான அம்சம் அது. நேரடியாகக் கண்ணிற்குத் தெரியாது. கமராஎடுத்ததை நாங்கள் பார்க்கிறோம்.

கமரா எடுக்கின்றபோது - அது சிலதை தெரிந்தெடுக்கும். சிலதை ஒடுக்கும். ஏதோ ஒரு ஒழுங்கமைப்பில்தான் எடுக்கும். அந்த ஒழுங்கமைப்பை நிர்ணயிப்ப வர்தான் டைரக்டர். அவர் சொல்கின்றபடி செய்பவர் தான் போட்டோ கிராபர்.

எமக்கு அந்த படத்தை தொகுத்து தருகின்றவர் எடிட்டர். இதை விளங்கிக் கொள்ளாமல், அப்படம் எவ்வாறு எம்மைக்கவருகின்றது என்பது பற்றிய தெளிவில்லாமல், நாங்கள் ஏன் கவரப்படுகிறோம் என்பதைப் பற்றி பேசமுடியாது.

மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு சினிமா நல்ல ஊடகம். மலை வெடிக்கிற மாதிரியும் அலை அடிக்கிற மாதிரியும் சினிமாவில் காட்ட முடியும்.

நனவோடைஉத்திஒன்றுஉள்ளது. அது சினிமாவிற்குள் இருந்துதான் இலக்கியத்திற்குள் வந்தது. அதை சிறப்பாய் தமிழில்எழுதக்கூடியவர் லா.சா.ரா என்று சொல்லப்படுபவர். இப்போது பலர் இவ்வாறு எழுதுகிறார்கள்.

சினிமா ஒழுங்காக படப்பிடிப்பு நடத்த வேண்டுமென்பதில்லை. ஆனால் அந்த ஓடரில் ஒருவர் இணைத்துத் தருவார். அதற்குப் பெயர் படத் தொகுப்பு. எடிட் பண்ணுவது என்று சொல்வது-

படத்திலுள்ள விறுவிறுப்பென்பது அது தொகுக்கப் பட்ட தன்மையைப் பொறுத்தது-

திடீர் என்றுகாட்சிகரைந்து கொண்டு போவதுமாதிரியும், திடீர் என்று வெட்டிக்கொண்டுபோவது மாதிரியும் புதிய காட்சி வரும்.

மற்றையது படத்தை நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சில குறிப்புரைகள் வரும்- அதை படத்திற்குள்ளாலேயே கொண்டுவரலாம்.

தமிழ்ச் சினிமாவில் அநேகமாகப் பாடல்கள் இந்தக் குறிப்புரையாகத்தான் வருகிறது.

வானொலியில் ஒரு நிகழ்ச்சியைக் கேட்பதற்கும் திரைப் படத்தைப் பார்ப்பதற்குமுள்ள வித்தியாசம் என்ன?

வானொலி என்றால் விரும்பிய நேரம் கேட்கலாம். எம்மைத்தயார் செய்யாமலேயே சினிமாவிற்கு நாம் தயார் செய்யவேண்டிவரும்.

மற்றையது இருள் சேர்ந்த நிலையில் இருந்தே சினிமா பார்க்கலாம். திறந்த வெளியில் சினிமாபார்க்கமுடியாது. பத்துப்பேர் இணைந்து சினிமா பார்க்கப் போயிருந்து, அந்தப் பத்துப் பேரும் தனித்தனியாகவே சினிமா பார்க்க முடியும்.

இங்கு காட்டப்படுகின்ற காட்சியும் பார்க்கின்ற நபரும் தனியாளாய் நின்றுகொண்டு பார்க்கப்படுகிறது,

திரைப்படத்தில் நடப்பதை விட ஓர் ஆள் மேலதிகமாக இருந்தால் அது நான்தான் என்கிற உணர்வு ஏற்படும்.

இதனால், அதாவது தனித் தனியாக நின்று பார்ப்பதனால் அறிவும் உணர்ச்சியும் ஒரே நேரத்தில் கட்டுப்படுத்தப்படுகிறது.

சினிமா மற்றைய தொடர்புச் சாதனங்கள் எல்லாவற்றிலும் பார்க்க இது வன்மையான சாதனம்.

சினிமாவில் உள்ள இசை பார்ப்பவனின் கவனத்தை மேலும்அதிகரிக்கப்பயன்படும் கலைகளின் மூலம் நாங்கள் சில பெறுமானங்களையும் பெற்றுக்கொள்ளலாம். நாங்கள் எவை எவற்றை முக்கியமாகக் கொள்ள வேண்டும் என்கிற ஒரு பெறுமானமும் அதற்குள்ளால் வரும் எல்லாக் கலை வடிவங்களாலும் வரும். இலக்கியத்தில் இதுஅதிகம்.

சமூகப்பாதிப்புஎன்றுசொல்வது இந்தப் பெறுமான விஷயங்களாகும்.

இந்தச் சினிமா என்கிற கலை வடிவம் மேற்கு நாடுகளில்தான் தோன்றி வளர்ந்தது. அதற்கு பிறகு- 1924-ம் ஆண்டுக்குப் பிறகுதான் எங்களிடம் வந்தது.

மேற்கு நாடுகளிலேயே இதனுடைய பாதிப்புமிகஅதிகம்- சமூகவன்மை அதிகரிப்பதற்கும் சினிமா ஒருகாரணமாகும்

இன்னொரு விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்- திரைப்படம் என்பது ஒரு கைத்தொழில். அது இலாப நோக்கத்திற்காகத் தான் செய்யப்படுகின்றது.

இரண்டுபேர் சேர்ந்து ஒரு படம் எடுத்துவிட்டு, நான்குபேர் சேர்ந்து பார்த்துவிட்டு போகிற விஷயம் அல்ல- உலகத்திலே உள்ள மிகப்பெரும் கைத் தொழில்களில் அதுவும்ஒன்று- இந்தியாவில் மிகமுக்கியமான ஏற்றுமதி உற்பத்திகளில் ஒன்றுசினிமாப்படம். அமெரிக்காவில் மிகமுக்கியமான ஏற்றுமதி உற்பத்திகளில் ஒன்று ஹொலிவூட் படங்கள்.

இதில் பொருளாதாரம் தான் வேலைசெய்யும்-பொருளாதாரத்தில்பேசப்படும்காரணிகள்பேசப்படும். தயாரிப்பு. உற்பத்தி, நுகர்வு, சந்தைப்படுத்தல் ஆகியவை எல்லாம் வேலை செய்யும்.

அப்படிச் செய்கிற போது இலாபநோக்கு முக்கியமானதாகும். இதனால் எந்தளவிற்கு மக்களை கவரமுடியுமோ அந்தளவிற்கு நன்மை தீமை பார்க்காது படம் தயாரிக்கப் படும்.

அவன் என்ன செய்வான் என்றால்அச்சமூகத்தில்உள்ள மேலாண்மைச் சக்திகளுடன் இணைந்து போகின்ற முறைமையில், படங்களை தயாரிப்பான்.

அப்படி நாவலும் வரலாம். வித்தியாசம் என்னவாயின் நாவலை வாசிப்பவரின் தொகைக்கும் அந்நாவலை படமாகப் பார்ப்பவரின் தொகைக்கும் எத்துணை வித்தியாசம் இருக்கும்?

இதனால் சமூக வன்மைகள் அதிகரிப்பது சாத்தியமானதாகிறது. இது முக்கியமான விஷயம்.

தமிழ்நாட்டை எடுத்துக் கொள்வோம் என்றால் 1967-ம்ஆண்டிலிருந்து 94-ம் ஆண்டுவரை சினிமாவோடு சம்பந்தப்பட்டவர்கள் தான் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருக்கின்றார்கள்.

சினிமாவினுடைய கவர்ச்சி இதன்மூலம் நன்கு தெரியவருகிறது.

எம்.ஜி.ஆரை ஏன் விரும்பினார்கள் என்றால் அவர் திரைப்படங்களில் தன்னைக் காட்டிக் கொண்ட விதம். தமிழ்நாட்டில் உள்ளஎல்லாத் தொழில்களிலேயும் சம்பந்தப்பட்ட படங்களில் அவர் நடித்திருக்கிறார். சாதாரண தொழில் எல்லாவற்றிலும் எம்.ஜி.ஆர். நடித்துள்ளார். மிகச் சாதாரணமானவன் திடீர் என்று பெரியவன் ஆகிவிடுவான்.

இதைப் பார்த்துக் கொண்டிருப்பவன் ஏன் அவ்வாறு தான் வரமுடியாது என சிந்திக்கின்றான்.

தமிழ் நாட்டில் மட்டுமல்ல; தெலுங்கு நாட்டிலும் இந்தப் பிரச்சினை உள்ளது. ராமராவ் - கடவுள் பாத்திரங்களில்தான் நடிப்பார். சாதாரண பாத்திரங்களில் அல்ல

அதில் சமூகப் பாதிப்பிலிருந்து நாம் தப்ப முடியாது. ஏனெனில் அந்த சாதனத்தின் தன்மை அது.

நாங்கள் அதை எவ்வாறு பயன் படுத்த வேண்டும் என்பதுதான் கேள்வி. பயன்படுத்துகிற முறைமையில் தான் எல்லாமே இருக்கின்றது. அதைச் சரியான முறையில் பயன் படுத்த வேண்டும்.

## நாசிசத்தின் உச்சமான வதை முகாம்கள்

உயிரியல் பரிசோதனைகளுக்காக சிறிய விலங்குகளைப் பயன்படுத்துவதை கண்டிருக்கிறோம். ஆனால் ஹிட்லர் இதிலும் தான் வித்தியாசமானவன் என்பதை நிரூபித்தான். எண்ணற்ற மனித உயிர்களை தன் கொடூரமான எண்ணங்களுக்கும் பரிசோதனைகளுக்கும் வடிகாலாக்கிக் கொண்டான்.

ஹிட்லருடைய தலைமையிலான தேசிய சோசலிஸ்டுகள் 1933-1945 க்கு மிடைப்பட்ட காலப்பகுதியில் யூதர்களுக்கும் தங்களது அரசியல் கருத்துக்கு எதிரானவர்களுக்கும் இழைத்த பயங்கரம் மனித குல வரலாற்றில் மிகவும் மோசமானது.

60 இலட்சம் யூதர்கள், அரசியல் எதிரிகள் கொலை முகாம்களில் கொன்றொழிக்கப்பட்டனர். கிட்டத்தட்ட நூறு ஏக்கர் பரப்பிலமைந்திருந்த வதைமுகாம் ஒன்று ஒஸ்றியாவில் அமைக்கப்பட்டிருந்தது. இன்றும் நினைவுச் சின்னமாய் இருக்கும் இம் முகாமில் இன்றுமுள்ள எச்சசொச்சங்கள், கொடூர நினைவுகளை கிளறிக் கொண்டேயுள்ளன.

இங்கேயிருந்த கைதிகளில் தினமும் மூவர் பகிரங்க மரண தண்டனைக்குள்ளாக்கப்படுவதற்காய் கொண்டு வரப்படும் போது எழும் ஓலம், கல் மனதையும் கரைக்க கூடியதாயிருக்கும். ஆயிரக் கணக்கானோர் ஆடைகளற்று, ஆண் பெண் பேதமற்று அடைக்கப்பட்டிருந்தனர்.

பசியாலும் நோயாலும் உருக்குலைந்து போன இக் கைதிகள் கடூழிய வேலைகளுக்கு பலாத்காரமாக உட்படுத்தப்படுவர். நெஞ்சு எலும்புகள் துருத்திக் கொண்டிருக்க, கற்பாறைகளைத் தலையில் சுமந்தபடி படிகளின் மேல் ஏறும்படி வற்புறுத்தப் படுவர். அரைவாசி ஏறியபடி இடறுப்பட்டு வீழ்ந்தே இவர்கள் அனைவரும் செத்தொழிந்தார்கள்.

இதைவிட கொடூரம் ஒரு மனித உடல், எவ்வளவு தூரம் நச்சு வாயுவை சுவாசிக்க தகுதி வாய்ந்தது என்பதை அறிவதாகும். சைக்ளோன் - B என்ற நச்சு வாயு மூடப்பட்ட அறைகளுக்குள் செலுத்தப்படும். தாங்கள் செத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தும் உணராமல் வதைந்தே இறந்து போயினர் ஆயிரக்கணக்கான யூதர்கள்.

இந்த வதை முகாமில் கொல்லப்பட்டோரின் உடல்களை எரிப்பதற்காய் மூன்று பெரிய உலை அடுப்புகளும் பயன்பட்டன. இந்த உலைகளின் இரும்பு வாசல்களில் தினமும் மலர் வளையங்களை இன்று வைத்துச் செல்கின்றனர் இங்கு வரும் மக்கள். இந்த முகாமை பார்வையிட்டு வரும் ஒவ்வொருவரது கண்களும் அழுது சிவந்திருப்பதையே காணமுடிவதாக இவ் ஊர்மக்கள் கூறுகின்றனர்.

வதைமுகாமின் இறுதிப் பகுதி உயிரியல் ஆய்வு கூடம். உயிரோடுள்ள மனிதனுக்கு சத்திர சிகிச்சை உணர்விழக்க வைக்கப்படாமல் நடந்ததும் இங்குதான். ஹோர்மன்களின் தொழிற்பாட்டை அறிவதற்காய், ஊசிகள் நூற்றுக் கணக்கில் ஒரே மனிதனுக்கு ஒரே நேரத்தில் செலுத்தப்பட்டதும் இங்குதான்.

நடந்து முடிந்த கொடூரங்களின் நினைவுகளால் இன்று இப்பகுதி மௌனமாகிக்கிடக்கிறது. இனவெறியும் வக்கிர எண்ணங்களும் இங்கே புதைந்து போய்க்கிடப்பதை அந்த மௌனம் இன்றும் கூறிக் கொண்டேயுள்ளது.

# மக்களின் தலைவனாக மரணித்த கிம்

இம்மாதம் எட்டாம்திகதி வடகொரியத் தலைவர் கிம் இல் சுங் தமது 82-வது வயதில் இருதய நோய் காரணமாக இறந்த செய்தி கேட்டு வடகொரியாவின் மக்கள் வடிக்கும் கண்ணீர் இன்னமும் வற்றவேயில்லை. தமது தலைவருக்கு இறுதி மரியாதையை செலுத்த வந்து குவிந்த மக்கள் தொகை காரணமாக சென்ற செவ்வாய் வரை கிம் அவர்களின் இறுதி நிகழ்வுகள் தள்ளிப் போடப்பட்டன. வடகொரியாவின் பொதுவிடங்களில் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக காணப்படுவதே எங்கும் காணும் காட்சியாக இருப்பதாக கூறப்படுகின்றது. கிம்மின் பூதவுடலும் பொதுவுடமைப் புரட்சியின் புகழ் பூத்த தலைவர்களான லெனின், மாவோ, கோசிமின் போன்றவர்களின் புகழுடம்பைப் போலவே பாதுகாத்து வைக்கப்படும் எனத் தெரிகின்றது. ஆனால், லெனின், கோசிமின் போன்றோரை அந்தந்த நாட்டவரே மறந்து போகும் வேளையில் - சோசலிச முறைமையினைபல நாடுகள் தாமாகவே புறக்கணிக்கும் ஒரு நிலையில் மேற்குலகம் பொதுவுடமை வழிநின்ற கியூபா போன்ற நாடுகளை நசுக்கி அழிக்க முற்படும் கட்டத்தில் - இவற்றிற்கு எல்லாம் முற்றிலும் மாறான நிலையொன்றை கடைப்பிடித்து கிம் தனது தற்சார்புக் கொள்கை அடிப்படையில் தாக்குப் பிடித்தமை ஒரு அதிசயிக்கத்தக்க விடயமே. எனவே எப்படிப் பார்த்தாலும் கிம் ஒரு பிரமிக்கத்தக்க மனிதராகவே காணப்படுகின்றார். எனவே கிம் எப்படிப்பட்ட மனிதர்? அவரது ஆளுமையின் கீழ் வடகொரியா நிர்வகிக்கப்பட்டது எவ்விதம்? இவை யெல்லாம் இன்று பலரின் கவனத்தையும் ஈர்க்கும்விடயங்களாகின்றன.

இன்று வடகொரியா குறித்து குறிப்பாக மேற்குலகால் உருவாக்கப்படும் தோற்றப்பாடு என்ன? இற்றைவரை எந்தவொரு பத்திரிகை நிருபரையும் (மிகக்குறைந்த சிலரைத் தவிர) அனுமதிக்காத தனது பொருண்மிய நிலை குறித்து புள்ளி விபரங்களை வெளியிடாத வடகொரியா குறித்து - வதந்திகளாக -கட்டுக்கதைகளாக - கற்பனைச் செய்திகள் பல இட்டுக்கட்டப்பட்ட வண்ணமேயுள்ளனஎன்றாலும் வடகொரியத் தலைமையோடு சீரான உறவைப் பேணும் ஒரு சில அரசியல் ஆய்வாளர்கள், அவ்வப்போது அனுமதிக்கப்படும் வெளிநாட்டவர் போன்றோரால் காலத்திற்குக்காலம் உண்மை நிலை வெளிக்காட்டப்படுகிறது. அண்மையில் கூட தனது இரண்டாவது கொரியப் போரை ஆரம்பிக்க வடகொரியா தயாராகி விட்டதாக மேற்குலக செய்தி இதழ்கள் யாவுமே ஒப்பாரி வைத்தன. ஆனால் மிகஅண்மையில் வடகொரியா சென்று திரும்பிய அமெரிக்க பத்திரிகையாளர் ஒருவர்அங்குஎவ்விதபோர் ஆயத்த நிலையோ, போர்குறித்த பரபரப்போ காணப்படவில்லை என்கிறார். இருந்தபோதும் மேற்குலகமோ கிம் இல் சுங்கைஇறுமாப்புபிடித்த சருவாதிகாரி என்றும் பதவி வெறி பிடித்த மனநோயாளி என்றும் சித்தரித்தன. வடகொரியா ஏறத்தாழ வீழ்ச்சியடைந்து விட்டதாக - அதன் பொருண்மிய கட்டமைப்பு சீர்குலைந்து பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுவதாக கொடிய அடக்குமுறை தாளாது மக்கள் எலும்பும் தோலுமாக நடமாடுவதாக சிரிக்கவோ பேசவோ உரிமை இல்லையென தொடர்ந்து சேய்திகளைவெளியிட்ட வண்ணமேயுள்ளன அதுமட்டுமன்றி இராணுவ சதிப் புரட்சிகள், மக்களின் கலகங்கள் அடிக்கடி நடப்பதாக வேறு கூறி வடகொரியா ஒரு தீண்டத்தகாத முற்றிலுமாக உலகால் ஒதுக்கப்பட்ட தனிமைப்பட்ட நாடாக சித்திரிப்பதில்இவைகணிசமான அளவு வெற்றியும் கண்டன. வடகொரியஅணுக்குண்டு சிக்கலைஉலகின்முதன்மைச்சிக்கலாக காண்பித்தன. ஆனால் இவையெல்லாம் பற்றி வடகொரியா அலட்டிக் கொள்வதேயில்லை. இவ்வாறாக பெருத்தஎதிர்ப்பு உணர்வலைகளை தோற்றுவிக்கும் வடகொரியாவின் உண்மை நிலை என்ன?



டெங்கும் - கிம்மும் உற்ற நண்பர்கள்

வடகொரியா குறித்து மிகையான தேவையற்ற அச்சவுணர்வுகள் கிளப்பப்படுவதாக பொய்மைகள், புளுகுகள் நிறைந்த கட்டுக்கதைகள் கட்டப்படுவதாகவேவடகொரியா தொடர்பான, கவனமுள்ள அரசியல் ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர் வடகொரியா நகர்கள், ஏனைய ஆசிய நகர்களைவிட அவ்வளவு தூய்மையாக காட்சியளிக்கின்றன;

மக்கள் குறிப்பாக இளம் சிறார் அங்கு எவ்வளவுஆரோக்கியமாக தென்படுகின்றனர்; வட கொரிய மக்களின் உணவு எவ்வளவு நிரம்பிய ஊட்டச்சத்துக் கொண்டது. இரவு நேர நகரவாழ்க்கை எவ்விதம் அமைதி நிறைந்தது என்பவை பற்றி இவர்கள் கூறும் கருத்துக்கள் வியப்புக்குரியவை. மக்கள் பரபரப்பற்று அமைதியாக ஆரோக்கியமாக பொதுவாக மனநிறைவோடு வாழ்கின்றார்கள். என்றே இவர்கள் உறுதிபட எழுதுகின்றனர். எனினும் எங்கு நோக்கினும் தலைவர் கிம்மின், உருவப்படங்கள், சிலைகள், அவர்தொடர்பான செய்திகள் என வட்கொரிய மக்களின் வாழ்க்கையை முற்றிலுமாக கிம் ஆக்கிரமித்து இருப்பதையும் குறிப்பிடுகின்றனர். கல்வி முறையிலிருந்து கலை, பண்பாடு, வரை உணவுப் பங்கீட்டிலிருந்து உழைப்பாளர் நிலை வரை எல்லாமே திட்டமிடப்பட்ட ஒரு ஒழுங்கு முறையின் கீழ் இயங்குவதை மாற்றுக்கருத்துக்கட்கு இடமே இல்லாத சமூக நிலை தென்படுவதையும் இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இது குறித்து வடகொரியாவின் வாதங்கள் ருசிகரமானவை. மக்களின் அடிப்படைத் தேவைகள், எதிர்பார்க்கைகள் நிறைவேற்றப்பட்டு அவர்கள் உடல் மனநல வளர்ச்சிக்கு வழிகோலும் அமைப்பில் மாற்றுக் கருத்துக்கள் அனாவசியம் என்பதே அவர்கள் நிலை. வடகொரியா இன்னமும் தனக்கேயுரித்தான சோசலிச முறைமையொன்றை தழுவி தனித்து நிற்பது குறித்துகேட்கப்பட்ட வினாவிற்கு அங்குள்ள முதன்மைப் பேராசிரியர் கூறிய பதில் இதுதான். 'தனிமைப்பட்டு இருப்பது எங்கள் நோக்கமல்ல. அது எங்களுக்கு பிடித்தமான விடயமும் அல்ல ஆனால் ஒன்றை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

> "தனிமைப்பட்டிருப்பது எங்களுக்குப் பிடித்தமான விடயம் அல்ல. ஆனால் தனிமையிலிருக்கும் போதே புதிய எண்ணங்கள், புதிய முறைமைகள் தோற்றம் பெறுகின்றன."
>
> - வட கொரியப் பேராசிரியர் ஒருவர்

தனிமையில் இருத்தல் என்பது எப்போதுமே புதிய எண்ணங்கள், புதிய முறைமைகளின் தோற்றுவாயாக அடித்தளமாக அமைகிறது. தனிமை நிலைமையிலே புத்தரும், யேசுநாதரும், முகமது நபியும் ஏன் மாட்டின் லூதரும் தமக்கான உண்மைகளை கண்டறிந்தனர். ஆயினும் பல நூற்றாண்டுக்கால அடக்குமுறைகளின் பின்னரே இவர்களது எண்ணங்கள் நிலை கொண்டன. அதுவும் எத்தனை மக்கள் துயருற்ற பின், கொல்லப்பட்ட பின்'' என்றார்.

வடகொரிய சோசலிச முறைமை மிகவும் வித்தியாசமானது. சோவியத்-சீன பட்டறிவுகளை பாடங்களாக இவர்கள் வரித்துக் கொண்டனர். இன்னும் கூட கொம்யூன் முறைமையில் அங்கு வேளாண்மைத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. அதேசமயம் சோசலிச கட்டுமானம் என்பது வெறும் பொருண்மிய உறவுகளை மட்டும் கொண்டதல்ல. அதற்கு இன்னுமொரு பரிமாணமும் கிம்மால் புகுத்தப்பட்டது. மனித நடத்தைகளின் அடிப்படையில் அவர்களது உள்ளார்ந்த தேவைகளை மனிதாபிமானஉளவியல்அடிப்படையில் அறிய முற்படல் என்கிற மனிதம் என்னும் பக்கமும் இங்கே இணைக்கப்பட்டது. கிம்மின் இத்தகைய கோட்பாடுகளை அவர்கள் யூக்சி (Juche) என விசேடித்து அழைக்கிறார்கள். இதன் நேரடிப் பொருள் ஒருவர் தனக்கு தானே எசமானனாக-பொறுப்பாளனாக - தற்சார்பாக இருத்தல் என்பதாகின்றது. மனித நடத்தைகளை இக்கோட்பாடுஅடிப்படையில் விடுதலைக்கான அவர்களின் அவா - அவர்களது ஆக்கபூர்வமான தன்மைகள் உணர்வு பூர்வமான எண்ணப்பாடுகள் என முப்பரிமாணம்கொண்டதாக கணிக்கின்றது. இவற்றின் அடிப்படையிலேயே மக்கள் தமது பொருண்மிய நலன்கள் குறித்து ஆர்வமுடையோராக தமது உடல் உள வளர்ச்சி குறித்து அக்கறை கொண்டோராக தமக்கென நிலையான பாதுகாப்பான வாழ நிலையை தேடுவோராக அமைகின்றனர். எனவே இவற்றினை அடைவதற்காகவே தாம் முயல்வதாக வடகொரியர் கூறிக் கொள்கின்றனர். இத்தகைய இலக்கினை அடைவதற்காக தமது தலைவர் கிம் தம்மை அறிவுலகப் புரட்சி, கலாச்சாரப் புரட்சி, தொழில்நுட்பப் புரட்சி என்னும் முப்புரட்சிகளுக்கு ஊடாக தம்மை நகர்த்திச் செல்வதாக நம்புகின்றனர். எனவே தமது மாபெரும் தலைவர் தம்மை யப்பானியர் ஆதிக்கத்திலிருந்து விடுவித்து நிலப்பிரபுத்துவ சுரண்டல்முறைமையிலிருந்து விடுவித்து அமெரிக்க மேலாண்மைக்கு சவால் விடுத்து தமது நல்வாழ்வை உறுதிப்படுத்திய பெருமகன் என்பதே அவர்கள் உச்சரிக்கும் மந்திரமாகின்றது. இத்தகையதொரு மனநிலையைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கேற்பவே வடகொரியா எங்கணும் புரட்சிகர சுலோசங்களும், கிம்மும் மக்களும் இணைந்த தோற்றங்களும் இளைய தலைமுறையின் எழுச்சிக்கு வித்திடும் கருத்தோவியங்களும் அமெரிக்காவிற்கு எதிரான கடும் கண்டனங்களுமாக நிறைந்து வழிகின்றன. எங்கு பார்த்தாலும் வட கொரியாவின் வளர்ச்சிக்கு தொழிலாளர், விவசாயிகள், அறிவாளர்கள் போர் வீரர்கள் என நான்கு பிரிவினரும் இணைந்த வருக்கமே முதன்மைப்படுத்தப்படுகின்றன. எனவே சுருக்கின் தற்சார்பான தனது தலைவிதிக்கு தானே பொறுப்பான இயல்பு கொண்ட ஒரு சமூகத்தொகுதியை கிம் உருவாக்கி விட்டார் என்பதில் எவருக்கும் இன்று சந்தேகம்கிடையாது.

ஏனென்றால் கொரியாவின் வரலாறே பலமிக்க அண்டை நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட போராடியதாகவே இருக்கின்றது. இன்றும் அன்றும் சரி சீனாவுக்கும் யப்பானுக்கும் ஏதோ ஒரு வகையில் கொரியத்தீபகற்பம் குறித்து ஈடுபாடு இருந்தே வருகின்றது. இன்னும் வட கொரியாவின் நெருங்கிய நண்பனாக சீனாவும் நெருங்கிய வணிக உறவு கொண்ட நாடாக யப்பானும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இருபதாம்நூற்றாண்டுத் தொடக்கத்தில் 300 வருட சீன ஆதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டு கொரியா யப்பானின் வசம்வந்தது. 1905-ம்ஆண்டு போரில் ருஷ்யாவை யப்பான் தோற்கடித்த பின் 1895-ம் ஆண்டே தன்வசமான கொரியா தீபகற்பத்தை 1910 அளவில் தன்னோடு இணைத்துக் கொண்டது. யப்பானிய எதிர்ப்புப் போராட்டத் தோடு தான் 1912-ம் ஆண்டு ஏப்ரல் 15-ம் திகதி பறந்த கிம்பின் போராட்ட வாழ்வு ஆரம்பமாகின்றது. பின் அவர் மஞ்சூரியாவிலிருந்து சோவியத் சென்று அங்கு இராணுவப் பயிற்சியும்பெற்று கொரியப்படையணிக்கு பொறுப்பாக . நியமிக்கப்பட்டார் பின் 1945 செப்டம்பர் மாதமளவில் அவர் மீண்டும் சோவியத் தரப்பால் கொரியா அனுப்பப்படுகிறார். பின் இரண்டாம் உலகப் போரில் சோவியத் தலையிட்டு யப்பானின் கீழ் இருந்த வடகிழக்கு ஆசியப் பகுதிகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொணர்கிறது. தோற்கடிக்கப்பட்ட யப்பானிய ராணுவம் சரணடைவதற்கு வசதியாக கொரியாப் பகுதியை 38 வது சமாந்தரக் கோட்டின் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஆனால் இப்பிரிவானது பின்னர் கொரியாவை இரண்டாகப் பிரித்த வரலாற்றுப் பிரிவினையாகி விட்டது. சோவியத் ஆதரவோடு வடகொரியாப் பகுதிக்கு கிம் தலைவராக்கப்படுகிறார். அதே வேளை தென் கொரியப் பகுதி அமெரிக்க செல்வாக்குப் பரம்பலிற்குட்பட்டது. கொரியாவை மீண்டும் இணைக்க விரும்பிய கிம் சோவியத் உதவியோடு கொரியப் போரை (1950 - 53) ஆரம்பிக்கின்றார். எனினும் அமெரிக்க தரப்பு போரில் குதித்ததால் இரு கொரியாவுமே பெருத்த சேதத்தைக் கண்டன. 30 இலட்சம் மக்கள் இதில் கொல்லப்பட்டதாகக்கூறப்படுகின்றது. ஐ நா தலையிட்டு போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தியமையால், இரு கொரியப் பிளவும் உறுதிப்பட்டது. அன்றிலிருந்து 38 வது சமாந்தர ரேகை எல்லைக் கோடாகியது. அங்கு எல்லையில் 35,000 அமெரிக்கப் படை நிலைகொண்டது 10 மீற்றர் உயரமும், 3 மீற்றர் அகலமும் கொண்ட மதிலொன்றைக் கட்டியது. அன்றிலிருந்து இன்று இவ்எல்லையிலுள்ள பன்முன்யொங் (Panmunjong) எனும் பகுதியே இரு கொரியத் தரப்பினரும் ஐ.நா வின் முகதாவில் சந்திக்கும் ஓரேயொரு இடமாகவுள்ளது என்பது வரலாறு.

**பாலகுமாரன்**

தென் கொரியாவோ, கொரியக் குடியரசு என்ற பெயரில் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக முதலாளிய பொருண்மிய முறையில் வளர்த்தெடுக்கப்பட்டது வடகொரியாவோ மக்களின் சனநாயகக் கொரியக் குடியரசாக தொடக்கத்தில் ஸ்டாலின் வழியில் இறுக்கமான பொதுவுடமை வழியில் நடைபயின்றது சோவியத் உதவியோடு, கொரியப் போரில் சீரழிந்த தனது கட்டமைப்புக்களைச் சீர்படுத்தியது. பின் 1960 களில் சீன-சோவியத் கொள்கைப் பிணக்கின்போது சீனச் சார்பெடுத்து மாவோவின் வழியில் சென்றது. இவ்வா

(11 ஆம் பக்கம் பார்க்க)

# "ஆடல் வடிவம் எதுவாக இருந்தாலும் அது மண்ணின் பண்பை வெளிப்படுத்த வேண்டும்"

## நடனக் கலைஞர் வேல்ஆனந்தனுடன் ஓர் சந்திப்பு - ரகுராம்

"தூய செந்தமிழ் தந்தருள் செய்குவாய் தூயவளே சீர் கலைமகளே அம்மா,'' ஒலிக்கும் தமிழிசை, கண் சிமிட்டலும், புருவ நெளிப்பும், இதழ்களின் சுழிப்பும், விரிந்து சுருங்கும் நெற்றியும், ஒன்றிப் போய், ஆடும் அந்த உருவம் 30 வருடங்களின் தேடல் மேடையில் பிரவாகமாய் வெளிவருகிறது.

ஆடல் கலையில் தனக்கென முத்திரை பதித்த வேல் ஆனந்தன் 850 மேடைநிகழ்ச்சிகள் 17 முழுநீள நாட்டிய நாடகங்கள் அவருடாக வெளிவந்துள்ளன. அனைத்துலகமக்கள் அரங்கினரால் (InternaiotalPeoples Tleatre Association) அங்கீகரிக்கப்பட்ட ஓர் கலைஞன்.

இசைத்துறையில் கர்நாடக இசையுடன், பழந்தமிழ்ப் பண்ணிசையையும், நாட்டார் இசையையும் ஆராய்ந்து பயின்றுவரும் இக்காலத்தில் நாட்டியத் துறையில் பரதமரபு மட்டுமன்றி கேரள நாட்டுக்குரியதான கதகளி முறைக்கும், நாட்டார் ஆடல் வடிவங்களுக்குமான தொடர்புகளை ஆராய்ந்து வரும் வேல் ஆனந்தன் தன் புதிய முயற்சியாக 'முழங்கும் முரசு' எனும் நாட்டிய நாடகத்தை விரைவில் அரங்கேற்றவுள்ளார்.

அவரது புகழ் பெற்ற ஆலய மணி, நீறுபூத்த நெருப்பு, பஸ்மாசுரன், என்ன தான் முடிவுவழியில் முழங்கும் முரசு குறிப்பிடத்தக்கதாக அமையும் கலைஞன் வேல் ஆனந்தனை சந்தித்து உரையாடினோம்.

உங்களின் தனித்துவமான கதகளி ஆடலையும், ஈழத்தின் பாரம்பரிய நாட்டார் ஆடல் வடிவங்களையும் இணைத்து புதியதோர் செந்நெறி ஆடல் வடிவம் ஒன்றை உருவாக்கும் பணியில் நீங்கள் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம். எந்த வகையில் இவ்விதமானதோர் முயற்சி உங்கள் சிந்தனையில் வந்தது என்று கேட்டபோது,

முப்பது வருட எனது கலை வாழ்க்கையில், பல நாடுகளிலும், பல சமூகங்களிலும் மத்தியில் எனது நடன நிகழ்ச்சிகளை செய்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளில் நாங்கள் மேடையேற்றிய ஆடல் வடிவங்களிலிருந்து நாங்கள் அன்னியப்பட்டு நிற்கின்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது. காரணம் என்ன வென்றால், நாங்கள் பரதத்தையோ, கதகளியையோ இவை திராவிட ஆடல் வடிவங்கள் என்று ஏற்றுக்கொண்டாலும் கூட, நாங்கள் தனித்துவமானவர்கள். எங்களது பண்புகளை எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு நாங்கள் இவற்றைப் பயன்படுத்தவில்லை. ஏனென்றால் எங்களைப் பற்றி ஆரம்பத்தில் சிந்திக்கவுமில்லை. பல அனுபவங்களின் பின்னர்தான் இந்தச் சிந்தனை எனக்குள் வந்துள்ளது.

ஆரம்பத்தில் பெரும்பாலான கண்டிய நடனக் கலைஞர்களுடைய மேடையில் நான் ஆடியுள்ளேன். பணிப் பாரத பிரேம்குமார் போன்றோருடன் பங்குபற்றியுள்ளேன் கண்டிய நடனம் சர்வதேச அளவில் இது அவர்களுக்குரியது என ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நாங்கள் சர்வதேச அளவில் போகும்போது அவர்கள் இதை தென்னிந்திய ஆடல் வடிவம் என்று கூறிவிடுகிறார்கள் அப்படியானால் இதை எங்களுடையது என எவ்வாறு உரிமை கொண்டாட முடியும் இது நிச்சயமாக ஓர் தோல்வி தான் எனவே செந்நெறி ஆடல் மரபில் ஓர் புதிய பாணியாவது உருவாக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம்.

அப்படியான நிலை வரும் போதுதான் எங்களது எண்ணங்களை வெளிப்படுத்த முடியும் இவ்வாறான தனித்துவமான, ஆடல் வடிவம் அவசியமானது எனக் கருதுகிறேன் என்றார்வேல்ஆனந்தன்

தொடர்ந்து, இது தொடர்பாக என்ன முயற்சிகளில் இறங்கியுள்ளீர்கள் என்று கேட்டோம்,

முதலில், கதகளி ஆடல் வடிவங்களுக்கான மலையாளத்திலமைந்த உருப்படிகளை தமிழில் மொழிமாற்றம் செய்தேன் இதன் மூலந்தான் பாகிபர்வத நந்தினி மாமகி, என்பதை தூய செந்தமிழ் தந்தருள் செய்குவாய் என்று நாகராஜன் எழுதிய தமிழ் சாகித்தியத்திற்கு ஆடலமைப்புச் செய்கின்றபோது, அது ஓர் புதிய வடிவம் எடுத்தது இப்போது இதற்கு நாங்கள் உரிமை கொண்டாட முடியும் மேலும், கதகளி ஆடல் முறையை தனிநபர் ஆடல் முறைக்கேற்பவும், பல தமிழிசை வடிவங்களுக்கேற்பவும் ஆக்கியுள்ளேன் இது பலரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது காலஞ் சென்ற பேராசிரியர் கைலாசபதி இதுபற்றி பாராட்டியிருக்கிறார் திருவாலங்காட்டுப் பதிகம், மேளப்பத உருப்படிகளுக்கு அறிமுகமாயிருக்கிறது இதுபோல மட்டக்களப்பிலுள்ள இசை வடி



வத்துக்கு, நாத தில்லானா என்னும் தில்லானா கதகளி பாணியில் உருவாக்கியிருக்கிறேன்மட்டக்களப்புநாட்டார் இசையும் நான் சற்று மாற்றம் செய்திருக்கின்ற கதகளி ஆடல்வடிவமும்ஒன்றுசேர்ந்து வருகின்றபோது அது எங்கள் மண்ணை பிரதிபலிப்பதாக அமைகிறது இந்தியாவில் வழுவூரார், கலாஷேத்ரா பாணிகள், கேரளா கப்பளிங்காடன் பாணி, மலபார்ப் பாணிஇப்படிப்பலஉள ஆகவே கலைஞர்கள் தங்கள்சூழ்நிலைக்கேற்ப கலையப் பிரதிபலிக்கச் செய்கிறார்கள் என்பது தான் உண்மை அங்கிருந்து கொண்டு வந்ததை சாஸ்திரியமாகச் செய்கிறோம் என்பதில் பெருமையில்லை எங்கள் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாக அது அமையவேண்டும்

நீங்கள் இவ்வாறு கதகளியில் மாற்றம் செய்வதை, கதகளி தோற்றம் பெற்ற கேரளா ஏற்றுக் கொள்கிறதா என்று கேட்டோம்,

நான் செய்து வருகின்ற இத்தகைய கதகளி ஆடல் வடிவங்கள் அங்கும் வரவேற்கப்பட்டுள்ளது கலாநிதி கபிலாவத்சாயன், ராதாகிருஷ்ண மேனன் போன்ற கதகளியில் துறைபோனவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். யாருடைய ஆடலை ஆடுகிறோம் என்பதைவிட, எங்களுடைய பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்துகிறோமா என்பதுதான் முக்கியம் என்றார்.

புதிய மரபை உருவாக்கும் உங்கள் பணிக்கு கிடைத்த வரவேற்புக்கள் விமர்சனங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள் என்றோம்,

நாங்கள் சரியானதைச் செய்யும்போது, அது அர்த்தமுடையதாயிருக்கும். மொழி தெரியாத ஒருவனுக்கு சமஸ்கிருதத்தில் பாடப்படுகிறதா மலையாளத்தில் பாடப்படுகிறதாஎன்பதுதெரியாது. தாய் மொழியில் பாடி அதன் கருத்தையும் தெரிந்து கொண்டு, ஆடலையும் இரசிப்பவன் நிச்சயம் பூரணமாக இரசிப்பான் தங்கள் திருப்திக்காக அனைத்தையும் அமைத்துக் கொண்டு நாட்டியம் வளர்ந்து விட்டது எனக் கூறினால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. நாட்டியம் வளர்ந்திருக்கின்றதென்றால், அதைத் தேடி மக்கள் கூட்டம் செல்கிறதோ அதை வைத்துத் தான் சொல்லலாம். அவர்களுக்குத் தேவையானது இருக்க வேண்டும். இந்நிலையில் முதலில் மொழிமாற்றம் செய்து, அதற்கேற்ப ஆடல் வடி

(7ஆம் பக்கம் பார்க்க)

## து. வைத்திலிங்கத்தின் 'மண்ணின் கனவுகள்' ஒரு நோக்கு!

பத்திரிகைகள், சஞ்சிகைகளில் உதிரியாக வெளிவரும் சிறுகதைகள் தொகுத்து நூலாக வெளியிடப்படுகின்றமை சமீப காலத்தில் முன்னேற்ற கரமாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த மண்ணில் பிரசுரத்திற்குரிய வசதிகள் பாதிப்படைந்திருக்கிற போதிலும் சமீப காலத்தில் ஏராளமான இலக்கிய நூல்கள் வெளிவந்திருக்கின்றமை நல்ல அறிகுறியாகும்.

து. வைத்திலிங்கம் எழுதிய 'மண்ணின் கனவுகள்' என்ற சிறுகதை தொகுதி சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 20 கதைகள் கொண்ட இந்த நூல் ஓவியர் தயாவின் அற்புதமான ஓவியத்தை அட்டையில் சுமந்து வெளியாகியுள்ளது.

'மண்ணின் கனவுகள்' என்பது இப்புத்தகத்தின் பொதுத் தலைப்பாகும். இந்தப் பெயரில் நூலில் ஒருகதை சேர்க்கப்படவில்லை என்பதை முதலில் சுட்டிக் காட்ட வேண்டும்.

ஆசிரியரின் திடீர் பாய்ச்சலை இத்தொகுதியில் உள்ள 'கிணறு' என்ற கதையிலிருந்து அவதானிக்க முடிகிறது என முன்னுரையில் செங்கை ஆழியான் குறிப்பிட்டிருப்பது பொருத்தப்பாடானதாகும்.

'தூரத்து நட்சத்திரங்கள், 'எதிரொலி' ஆகிய இரு கதைகளிலும் இந்த மண்ணின் சமகாலம் மிக ஆழமாகச் சொல்லப்பட்டுள்ளது. இவை குறிப்பிடக் கூடிய நல்ல கதைகள் எனச் சொல்லத் தோன்றுகின்றன. இவற்றுடன் 'கிணறு', ''தீர்ப்பு'', 'ஒரு காகிதப்பூ கருக்கட்டுகிறது' ஆகிய சிறுகதைகள் குறிப்பிடத்தக்கன.

வெளிநாடுகளுக்கு அத்தனை பிள்ளைகளையும் அனுப்பி வைத்து விட்டு மரணமான மனைவியை எண்ணி விசும்பும் ஒரு வயோதிபரின் எண்ண ஓட்டம் 'தூரத்து நட்சத்திரங்கள்' என்ற கதையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த வயோதிபரின் இயலாமை நிலையை அவதானிக்கும் உறவுக்கார இளம்பெண் தனது வெளிநாட்டுப் பயணத்தைநிராகரிக்கின்றாள் என இக்கதையில் சொல்லப்பட்டுள்ளது.

நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் விமானப்படையின் கண்மூடித்தனமான குண்டு வீச்சிற்கு அப்பாவிப் பெண்கள், மழலைகள் பலியான வேளை, அக் குண்டு வீச்சை நடத்தியவிமானியின்குடும்பம் தெற்கில்விபத்தொன்றில் பலியாகின்றது என்பதை, 'எதிரொலி' என்ற கதையில்நூலாசிரியர் சித்தரித்துள்ளார்.

அழகாய்-அலட்டல்கள் இல்லாமல்-இக் கதை நகர்த்தப் பட்டுள்ளது.

'கிணறு' என்கிற கதையில் ஒரு சமூகக் கொடுமையை அரச அதிகாரி எதிர் கொள்கின்ற விதம், இதேவேளை அதிகாரத்தால் சமூகச் சீர்கேடு வளர்க்கப்படும் தன்மை என்பவை சொல்லப்பட்டுள்ளன.

இந்த நூலில் உள்ள சில கதைகளில் அரசாங்க உயர் அதிகாரிகள்-'சூதுவாது' அறியாதவர்களாகவே படைக்கப் பட்டுள்ளனர். மக்களின் சேவையே தமது நோக்கு என அவர்களை ஆசிரியர் காட்சிப்படுத்த முயற்சித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதே சமயம் கீழ் மட்ட அரச ஊழியர்கள் பயந்தவர்களாகவும், சேவை மனப்பான்மை அற்றவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

'கிணறு' கதையில்ரமணன், 'கண்ணாடிக்கு எத்தனை முகங்கள்' கதையில் அகிலன் ஆகிய இரு பாத்திரங்களும் இதை நன்கு வெளிப்படுத்துகின்றனர். ஆனால், நிஜம் வேறுமாதிரியும் இருப்பது தான் நடைமுறை யதார்த்தம்என்று சொல்லலாம்.

'எங்கே போகிறோம்' என்கிற கதையில் இராணுவத்தின் ஷெல் வீச்சிற்கு வீதியில் கிடக்கும் இளம் பெண்ணின் சடலத்தின் அவலத்தை சொல்ல வில்லை; இராணுவத்தின் கொடூரம் சொல்லவில்லை; அச்சடலத்தில் உள்ள கைக்கடிகாரமும், கண்ணாடியும் களவாடப்பட்டமை தான் நூலாசிரியரால் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளன.

இக்கதையில்-

ஷெல்லுக்கு சிதறிய பெண்ணின் தந்தை ''என்னுடைய மகளை கடவுள் கொண்டு போட்டார்'' என்று வேதனையில் அரற்றுகிறார். தன் மகளின் சாவிற்கு காரணமான எதிரி மீது அத்தந்தைக்கு கொஞ்ச ஆத்திரமாயினும் வராதா? எதிரிமீதான ரௌத்திரம் உணர்வு பூர்வமாகவாயினும் இல்லாமல் போனது யதார்த்த சிந்தனைக்கு முரணானது என்றே சொல்லத் தோன்றுகிறது.

'உறவுகளும் எல்லைக் கோடுகளும்' என்ற கதையில் இந்திய இராணுவத்தின் கொடுமைகளாக கோழி, ஆடு இல்லாமல் போய் விட்டமை சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நூலாசிரியர்-இங்கு முதன்மைபடுத்தியிருப்பது இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பையோ அல்லது- எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்தையோ அல்ல- (குறைந்ததுதமிழினத்தின்தனி மனிதன் மீதான கொடுமை கூட சொல்லப்படவில்லை) வெளிநாட்டிலிருந்து வரும் உறவுப் பெண்- ஊரில் உள்ள உறவினரோடு ஏற்படும் முரண்பாட்டை அடுத்து இராணுவத்திடம் புகார் சொல்வதை சித்தரித்துள்ளார்.

இவற்றை குறைபாடுகளாகத்தான் சொல்லத் தோன்றுகின்றது. ஆயினும் மண்ணின் வேதனைகள் கொஞ்சம் சொல்லப்பட்ட நூலாக இதைக் கொள்ளமுடிகின்றது.

வவுனியா- திலீபன்

# சிறுகதை

# வேப்பம் பூ

தென்றல் காற்று மிக இதமாக வீசிக் கொண்டிருந்தது. வீட்டின் நடுவேயுள்ள 'ஹோலில்' 'ஈஸிச்சேரில்' சாய்ந்து கொண்டிருந்த அன்னம்மாவை சாளரத்தினூடாகப் புகுந்த தென்றல் தொட்டுத் தடவிச் சென்றது. தென்றலின் இதமான தழுவலை மெல்லத் தழுவி உச்சி குளிரச் செய்யும் பண்பை -ரசித்து அனுபவிக்கும் மனநிலை தான் அன்னம்மாவிற்கு இப்போது இல்லை. கட்டிடங்கள் காடு போல விரிந்து கிடக்கும் நகர மத்தியில் இளம் குடும்பமாக இருந்த போது காற்று வாங்குவதற்காக வாரம் ஒரு முறையேனும் காசு செலவழித்து கடற்கரை களுக்கும் பூங்காக்களுக்கும் சென்று வந்தவள் தான் அவள். ஆனால் இப்போதோ இலவசமாக... எந்தத் தொந்தரவுமின்றி ...இதமான தென்றல் தழுவுகின்ற போதும் கூட அதன் சுவையை ரசிக்க அவளால் முடியவில்லை.

சாம்பல் பூத்த நெருப்பின் மீது காற்று ஊதும் போது நெருப்பு சுடர்விடுவதைப் போல அவளது மனமும்

காற்றைச் சபித்தாள். 'ஏன்தான் இப்படி அடிக்குதோ சனியன்.' திட்டினாள். இப்பகொஞ்ச நாளைக் கெண்டாலும் அடிக்காம இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும். மனம் எண்ணியது. வீசும் காற்றுக்கு தடையேதும் விதிக்க முடியுமா? சிந்தனை ஆராய்ச்சியில் சுழன்றது. கொடியில் கிடந்த துணி காற்றின் அசைவிற்கேற்ப படபடப்பதை போல மனம் படபடத்தது. என்ன செய்யலாம் என்று தொடங்கி எதுவும் முடியாது என்று முடிவுறும் போது கைகள் பிசைய அந்த நீண்ட ஹோலில் முன்னும் பின்னும் நடக்கத் தொடங்கினாள்.

ஒரு இரண்டு மூன்று நாளைக்கெண்டாலும் கொஞ்சம் பலமாக வீசாம இருந்தா ஒரு கொஞ்சத்தையாவது அள்ளிப் போடலாம். அவன் சுரேசனைக் கூப்பிட்டாப் போல என்ன? அவனும் முந்தி மாதிரியில்லை. கூப்பிட்ட உடனை ஓடிவந்து சொன்ன வேலையைச் செய்ய அவன் இப்ப பஞ்சிப்படுறான். பின்னைப் பாப்பம். பிறகு செய்யுறன் எண்டு சாட்டுச் சொல்லுறான். இல்லாட்டி நேற்றுப் பின்னேரம் அல்லது இண்டைக்கு காலமை ஒரு கொஞ்சத்தையாவது அள்ளியிருக்கலாம், எப்பன் இறுக்கிக்கதைச்சால் அவன் இரவில துணைக்கு வாறதையும் நிப்பாட்டிப் போடுவான் போல அவனும் இல்லையெண்டா இந்தப் பெரிய வீட்டில தட்டத்தனிய நான். இந்த வயது போனகாலத்தில் தற்சமயம்ஆரும் கள்ளர் காடையர் வந்தாலும்நினைக்கவே பயமாக் கிடக்கு. எதுக்கும் இண்டைக்கு பின்நேரம் வந்த உடனை...இப்ப நிலவுகாலம் தானே ..ஒருக்கா சொல்லிப் பாப்பம். நேற்று இந்த யோசனை வந்திருந்தால் ஒரு கொஞ்சத்தையாவது அள்ளியிருக்கலாம்தான். சாய் . அநியாயமாய் போச்சு இது என்ன காசைக் குடுத்தால் சந்தையில் வாங்கக் கூடிய சாமானே.

வழமைபோலபின்னேரமும் வந்தது.சுரேசனும் வந்தான். கையில் சில புத்தகக் கட்டுகளுடன் அவன் வந்தது வராததுமாக தேநீர்க் கோப்பையை கையில் திணித்தாள் அவள். 'உயர்தரப் பரீட்சையை சாவகாசமாக எழுதிவிட்டு மறுமொழி வரட்டுமன் பாப்பம்' என்று அநாயாசமாகத் திரியும் சுரேசனின் கைகளுக்குள் புத்தகத்தை கண்டதால் தனது சிந்தனையை வெளிப்படுத்த தயங்கிய அவள் நிதானமாகப் பார்த்த போதுதான் அவை வெறும் கதைப் புத்தகங்கள் என்பதைக் கண்டு கொண்டாள் மெல்லக் கதையைத் தொடங்கினாள்.

''தம்பி சுரேஸ்!''

''என்ன அன்ரி?''

''நேற்றும் சொன்னனான் மறந்து போனீர் போல...'' ''எதைச் சொல்லுறியள்...''

''இந்த ஒட்டுக்கு மேல கிடக்கிற பூவை அள்ள வேணும்'' ''ஆ... ஆ... இந்த வேப்பம் பூ அள்ளுறதைத் தானே அதுக்கு ஏன் அன்ரி அவசரப்படுகிறியள் ஆறுதலாய் அள்ளுவமே''

''அவன் சாவகாசமாய் பதிலளித்தான்.

''இல்லை கச்சான் காத்து அடிக்கத் தொடங்கியிட்டுது. இனி பூவெல்லாம் உதிந்து போகும். இப்பவே ஓட்டில பாரும்! எவ்வளவு பூ இஞ்சை பாரும். நிலத்திலையே எவ்வளவு உதிந்து போய் அநியாயமாய் கிடக்கு''

''அப்ப நிலத்தில் கிடக்கிறதை கூட்டி அள்ளுங்கோவன் அன்ரி''

'' நாய்கள் கண்டபாட்டுக்கு ஓடித்திரிகிறது. அந்த நிலத்தில் கிடக்கிற பூவை எடுத்து வடகம் செய்ய ஏலுமே. சாப்பிடுற சாமான் எல்லே பக்குவமாய் எல்லே செய்ய வேணும்'

''இதெல்லாம் பக்குவமாய் செய் தால் போல என்ன அன்ரி...அவன் முடிக்கவில்லை இல்லையில்லை பக்குவமாய் வடிவாய் செய்தால் .. வெளியில் இருக்கிற இரண்டு மகனவைக்கும் அனுப்பலாம். கொழும்புக்கு அவருக்கும் அனுப்பலாம். அவருக்கும் வடகம், வத்தல் எண்டால் நல்ல விருப்பம். இரண்டு பிடி கூடச் சாப்பிடுவார்.''

''அப்ப நீங்களும் அவரோட போயிருக்கலாமே, பக்குவமாய் செய்து குடுக்கலாமே'' ''போயிருக்கலாம் தான் பிறகு வீடு...

அதுக்காகத்தானே நானே இங்க இருக்கிறன்'' என்று கூறத்தொடங்கியவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அவர் இப்பவைகாசி விசாகத்தோடை ... போசன் போயாதானே. அந்த லீவுக்குள்ள வருவார் அப்ப இந்த வடகம் எல்லாத்தையும் போட்டு ரெடியாய் வைச்சிருந்தா அவருக்கும் குடுத்து விடலாம் மகனவைக்கும் அனுப்பலாம். மோனை, நீ இந்தத் தேத்தண்ணியைக் குடிச்சிட்டு இப்ப நிலவு காலம் தானே... இந்த ஜன்னலால ஏறினா ஒரு அரைமணித்தியாலத்தில கிடக்கிற பூ எல்லாத்தையும் அள்ளிப் போடலாம். செய்கிறிரே''

''ஏன்... நாளைக்கு காலையில அள்ளினா என்ன?''

'' இல்லை வெய்யில் ஏறினா வீழுந்து கிடக்கிற வேப்பம் பூ உடைஞ்சு துண்டு துண்டாய் போம். பிறகு அள்ளியும் பிரயோசனமில்லை அது தான் பாக்கிறன்'' அவள் அவசரமாகப் பதிலளித்தாள்.

''டெ... இவ்வளவு நேரமும் சொல்ல மறந்தெல்லே போனன். ராசன் கடிதமெல்லே போட்டிருக்கிறான் இன்டைக்குத்தான் வந்தது''

''என்ன அன்ரி எழுதியிருக்கிறான்?'' ''என்ன புதினமாம்?''

''உன்னை சுகம் கேட்கச் சொல்லியும்... உன்னைக் கடிதம் எழுதச் சொல்லியும் எழுதியிருக்கிறான். அதோட வடகமும், வத்தலும் வாற ஆட்கள் மூலம் அனுப்பட்டுமாம். அங்கை இந்தியன் சொப்பில வாங்கிறது ருசியாய் இல்லையாம்''

''ஆரும் கிட்டடியில போற ஆக்கள்இருக்கினமோ அன்ரி?'

''ஓமோம்தவத்தானுக்குபெம்பிளை வாற கிழமை போகுது. அவள் மல்லாகத்துப் பிள்ளை. பார்த்தால் நல்ல குணசாலி போல கிடக்கு. போன புதன்கிழமை தவத்தான்ர வீட்ட வந்து தாய் தேப்பனுக்கு சொல்லிப் போட்டுப் போனது''. அவள் நீட்டிக்கொண்டே போனாள்.

இந்த மண்ணுக்குள் தான் எத்தனை செல்வங்கள் பொதிந்து போய்க் கிடக்கிறது. தூரத் தூர விலகி ஓடினாலும் எட்டிஎட்டி அரவணைக்கும் அன்னையின்அன்பைப்போல. இந்த மண்ணின் உணவுச் சுவை உலகின் எந்த மூலையில்இருந்தாலும் ஈர்க்கச்செய்கிறது என எண்ணியவாறு சிந்தனையில் மூழ்கினான் சுரேசன்.

தனது கதைகளுக்கு செவி சாய்க்காமல்அவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போயிருப்பதை நேரம் கழித்துத்தான் அவள் அவதானித்தாள்.

''நானும் என்ர பாட்டில சொல்லிக் கொண்டே போறன். நீரும் ஏதோ கடும் யோசினை போல .. என்ன சுரேஷ்!'' அவள் குரலின் தொனி உயர்ந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்தான் சுரேசன்.''இல்லை ராசன்ரை கடிதத்தைப் பற்றித்தான் யோசிச்சன்'' ''நீர்ஏதும் எழுதுறதெண்டால் எழுதித்தாரும் நான் அனுப்பிவிடுகிறன்'' ''இல்லை அன்ரி உதுக்கு செலவழிக்கிற நேரமும், எழுதுற பேப்பரும் நட்டம். ஓலைப் பெட்டியொண்டு தாங்கோ கொஞ்சமெண்டாலும் வேப்பம் பூவை அள்ளித் தாறன்''சுரேசன் எழுந்தான். வேப்பம் பூ கிடைக்கப் போவதில் மட்டும் அன்னம்மாவிற்கு மகிழ்ச்சி.

**இளையவன்**

## ஒரு கண்ணீர்க் க(வி)தை

மணியில்லாத பார விறகுச் சைக்கிளை
முக்கி முக்கி மிதித்த அவன்
ஏதோ (அ)முக்கிய விஷயம் பேசி
கொல்லென்று சிரித்து
ரோட்டைத் தமதாக்கி அடைத்து
இரு பின்னல்களுக்குப் பின்னால் சென்ற
மூன்று இருபதுகளை நோக்கி
'மணியில்லைத் தம்பியள்
கொஞ்சம் விலத்துங்கோ' என்று
கெஞ்சி ஒலித்த வேண்டு குரல் கூட
அம்மூவர் காதில் விழாதுபோக
பசி மயக்கத்தில்
நிதானம் தப்பியதால்
சரிந்த சைக்கிள்
அவனையும் சரித்து
அவன்மேல் சாய்ந்தது.
விதியை அடைத்தவர்கள்
அலட்சியமாக ஊர்வலம்போக
வீதி ஓரத்து 'நையின்டிகள்' சில
ஓடிவந்து தூக்கிவிட்டபோது
விரக்திச்சோகப் பிசைவுடன்
அவன் கண்களில் கண்ணீர்
உடல் கீறல்களில் செந்நீர்!

- கருணைச்சுதன் -

## ஆடல்

வங்களைச் செய்து, புதிதாகப் படைக்கவேண்டும். அதனை மக்கள் வரவேற்பார்கள்எனக் கூறினார் வேல் ஆனந்தன்.

கதகளி ஆடலைப் பொறுத்தவரையில் எமது பிரதேசத்தில் அதன் அறிமுகம்பற்றி கூறுவீர்களா என்று கேட்ட போது,

கதகளி ஆடல் அரை நூற்றாண்டுக்கு முன்பே யாழ்ப்பாணத்தில் அறிமுகமானது 1940களில்வருகைதந்தகோபிநாத் அவர்கள், சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கதகளி நடனத்தை ஆரம்பித்தார் காலஞ்சென்ற நடன ஆசான்கள் ஏரம்பு சுப்பையா, வீ.கே.நல்லையாபோன்றவர்களும் கதகளி நடனப் பயிற்சி அளித்தார்கள். 50 களில் கதகளி ஆடல் முறை ஆரோக்கியமான வளர்ச்சி நிலையில்இருந்ததாக, கலைப் பேரறிஞர் ஈ. கிருஷ்ணய்யர் குறிப்பிட்டுள்ளார்.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரி பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டபோது கதகளி பயிற்றப்பட்டு தராதரப்பத்திரம் வழங்கப்பட்டது. பேராசிரியர் கைலாசபதி மறைவோடு, பேராசிரியர் இந்திரபாலாவின் வெளியேற்றத்தோடும, கதகளி ஆடல் பிரிவு சோபையிழந்து போனது எனக் குறிப்பிட்டார் வேல் ஆனந்தன்.

உங்களது புதிய மரபில் தயாராகும் முழங்கும் முரசு நாட்டிய நாடகம் எந்தவகையில் அமையும் என்றோம்,

ஒரு பகுதி நாட்டுக்கூத்தாகவும், ஒரு பகுதி கதகளி ஆடல் முறையிலும் அமையும். அதாவது, ஒரே வகையான தாள சந்த அசைவுக்கு, இரண்டையும் மேடையில் இணைக்க உள்ளோம். உதாரணமாக ஒரு பாத்திரம் நாட்டார் ஆடல் வடிவத்தில் வர மற்றைய பாத்திரம்கதகளி ஆடல் முறையில் வரும். கால ஓட்டத்தில் இரு ஆடல் வடிவங்களையும் இணைப்பதுதான் என் நோக்கம். நாட்டார் பாடல்களில் வரும் அங்க அசைவுகளை கதகளியுடன் இணைக்க வேண்டும்.

இப்படிச் செய்யும்போது அடிப்படையான நாட்டுக்கூத்தின் இயல்புகள் மாற்றப்படக் கூடுமல்லவா?எங்களது பாரம்பரியத்தின் அடையாளம் ஒன்று பாதிக்கப்படாதா என்று கேட்டோம்,

இந்த ஆடல் வடிவம் வேறாக இருக்கும். நாட்டுக் கூத்து வடிவம் (நாட்டார் ஆடல் வடிவம்) வேறாக இருக்கும். அந்த அடிப்படை மாறாது. நாங்கள் எங்களை இனங்காட்ட அடிப்படை வேண்டும். அதிலுள்ளதை எடுத்து கதகளியுடன் இணைத்து ஓர் புதிய வடிவத்தை தான் படைக்க முயற்சிக்கிறேன். சில பேர் கூறுவது போல் சாஸ்திரியத்தை கலக்கலாமா என்று கேள்வி எழலாம். சாஸ்திரியம் என்பது செந்நெறிமுறை.

ஆடலில்இரண்டு வழிஉண்டு ஒன்று மார்கி வழி. மற்றையது தேசி வழி. மார்கி வழி என்பதுபயிற்சியின் பால் வருவது, தேசி வழி என்பது இயல்பான நாளாந்தச் செய்கை. நாட்டுக்கூத்து இயல்பாக ஆடிக்காட்டும் தேசி வழி. அது எப்போதும் அந்த வழியிலேயே இருக்கும். அதைவைத்துக்கொண்டுதான் இதைப் படைக்க முயல்கிறோம்.

நாட்டுக் கூத்தில் பல வியப்பான அழகான கைவண்ணங்கள் உண்டு. அதனைச்சேர்க்க உள்ளோம்.

நாட்டார் ஆடல் வடிவத்தைக் கூட செந்நெறி ஆடல் வடிவமாக்க முயலலாம். அல்லது செந்நெறி ஆடல் வடிவமொன்றுடன் நாட்டார் ஆடலை இணைக்கலாம். ஆனால் அடிப்படை என்றும் இருக்க வேண்டும். இதில் கருத்து வேறுபாடு இருக்கக் கூடாது.

இதேபோல்தான், நாங்களும் அத்திவாரம் ஒன்றை வைத்து, புதிய மரபை, பாணியை உருவாக்கமுயல்கிறோம், எனத்தெரிவித்தார் வேல் ஆனந்தன்.

எதற்கும் எதிர்ப்புஇருப்பது போல் இதற்கும் இருந்தது. நான் முதலில் ஓர் நாட்டியக் குழுவை ஆடலில் ஈடுபடுத்திய போது விரசமான விமர்சனங்களும் எழுந்தன. ஆகவே, புதிதாகச் செய்யும்போது விமர்சனமும் இருக்கத்தான் செய்யும். அதில் மாற்றமில்லை. அதற்காக நான் சும்மாயிருக்கப் போவதில்லை என உறுதியாக கூறினார் வேல் ஆனந்தன்.

# நிலைமாறும் உலகில் நிலைத்த உந்தன் நினைவு!



## லெப்டினன்ட் ஆஷா

### வல்லிபுரம் விமலேஸ்வரன்

### [ஈசன்]

தாயகத்தாய் மடியில்: 11-01-1969

தமிழீழத்தாய் விடிவில்: 22-07-1989

நினைக்க வைத்து நினைக்க வைத்து
நெஞ்சத்து நினைவுகளால்
கனக்க வைத்து கனக்க வைத்து
கண்ணீரால் நனைக்கின்ற
நினைவுகளே நீங்களெல்லாம்
நிஜமாக ஓடி வந்தால் - எம்
மனப்பந்தல் உங்களுக்கு
மகிழ்வோடு நிழல் போடும்!

நில்லாமல் நீந்திவரும் உன்
நினைவுகளால் நாமிங்கே
சொல்லாமல் வாடுகின்றோம்
சுருதியில்லா ராகம் போல்!

பின்னிவரும் நினைவுகளை
பின்னிறுத்த இயலாமல்
எண்ணி எண்ணி ஏங்குகிறோம்
இரு விழியில் அருவி வர!

மங்கி மங்கி எரிகின்ற
மனவிளக்கின் வெளிச்சத்தில்
தங்கிவிட்ட உன் நினைவோ
தணல் போல தகிக்குதடா!
பொங்கி பொங்கி கொதிக்கின்ற
உதிரத்தின் உணர்வுகளில்
கல்லறைக் காவியங்கள்
கண்ணீரால் தோயுதடா!

அன்பர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும்
ஆஷாவின் நினைவின் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
அன்போடு அழைக்கின்றோம்.

"ஆஷா"
இல 1
நவீன சந்தை, சாவகச்சேரி.

ஆஷா குடும்பத்தினர்
சரசாலை.
(5097)

---

## 2ம் ஆண்டு நினைவாக



### கடற்புலி நக்கீரன்

[சங்கரலிங்கம் செந்தில்குமரன்]

தாயின் மடியில்: 30 - 3 - 1975

வீரச்சாவு: 22 - 7 - 1992

மண் மீட்க உயிர்தந்த
மாண்புமிக்க வீரனே!
ஆண்டு ரெண்டு அதற்குள் போயிற்றா,
கண்ணிமைக்குள் உன் உருவம் இன்னும்.

42, வைரவ கோயில் வீதி,
நாயன்மார்கட்டு,
அரியாலை.

- குடும்பத்தினர்

(8875)

---

## 3ம் ஆண்டு நினைவாக



### லெப். திலக்

(சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்)
வல்வெட்டித்துறை

பிறப்பு: 10-9-1992

வீரச்சாவு: 22-7-1991

வேரூன்றி விழுது விட்ட வேங்கையே திலக்
வீரத்தை விதைத்து விட்டு நீ --
சென்று மூன்றாண்டு ஆனதடா
காலங்கள் கடந்தாலும் - உன்
சாதனைகள் மறையாது
உன்னத தலைவரின் வழிகாட்டலில்
உன் நினைவுடன் நாமும் தொடர்வோம்.

- குடும்பத்தினர்

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை

(8884)

# சிங்களக் கட்சிகளிடம் தீர்வு இல்லை;

# இராணுவம் போரைத் தொடர்கின்றது

பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துவிட்டன. எதிர்பார்க்கப்பட்டது போன்றே இதில், இனப்பிரச்சினை தொடர்பாக குறிப்பிடும்படியாய் எதுவுமில்லை. இதேசமயம் ஐக்கிய தேசியக்கட்சி ஓரளவு தனது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளது என்றே கொள்ளலாம். பொது ஜன ஐக்கிய முன்னணியோ, வார்த்தையாடல்கள் மூலம், தமது நிலைப்பாட்டில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்த முனைந்துள்ளனர் என்றே கூற வேண்டும்.

''இனப்பிரச்சினைக்குமுடியுமெனில், அரசியல் ரீதியாகத் தீர்வு காண்பது, இல்லையேல், இராணுவத் தீர்வு காண்பது'' என்பதே ஐ.தே.க வின் பிரகடனம் ஆகும். இதில் அரசியல் ரீதியான தீர்வு என்பது தமிழ் வாக்காளருக்கான கண்துடைப்பே ஒழிய வேறில்லை. கடந்தகால ஐ.தே.க வின் அரசியல் வரலாற்றை மேலோட்டமாகப் பார்ப்பவர்கள் கூட இதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

இதைவிட ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா பௌத்த பீடங்களுக்கு எழுதிய கடிதத்தில் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார். இதில்,

''புலிகள் இயக்கத்தின் போர்ப் பலத்தைக் குறைப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் எதுவித மாற்றமும் இல்லை. வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைப்பதையோ அவற்றை ஒரே நிர்வாக அலகாககருதப்படுவதையோ நாம் ஆதரிப்பதாகஇல்லைஅரசகாணி உடமை, பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்ங்குபேணல், துறைமுகங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தலாம். அவசியமானால் படைப்பலம் பிரயோகித்து தீர்வு காணப்படும்'' என விபரம் தெளிவானவரையறையுடன் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு ஐ. தே. கட்சி காபந்து அரசாங்கமும், போர்ச் சூழ்நிலையில் எந்தவித தளர்வையும் ஏற்படுத்த விரும்பவில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் ஐந்துவருட காலமாக இருந்து வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதும் வட பகுதி மீதான அரசின் நிலைப்பாட்டில் தளர்வு ஏதும் ஏற்படவில்லை.

அவசரகாலச்சட்டம்முடிவடைந்த போதும், முன்னர் போலவே செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இதன் பிரகாரம், வடக்கு மீதான பொருளாதாரதடையும், இராணுவ நடவடிக்கைகளும் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியற்கைதிகளையும் விடுதலை செய்ய அது தயாராக இல்லை.

## பொ. ஐ. முன்னணியிடம் தீர்வில்லை

ஐ. தே. கட்சி இவ்வாறாக இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் தனது நிலைப்பாடு என்பதை தெளிவாக வெளியிட்டது போல் பொது ஜன ஐக்கிய முன்னணி இல்லாது விடினும், இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு அதனிடம் இல்லை என்பது மட்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

''பொதுஜன ஐக்கிய முன்னனி ஆட்சிக்கு வந்ததும் யுத்தத்தைநிறுத்தி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவ்வாறு செயற்பட முடியாது போனால் அரசியலில் இருந்து ஒதுங்குவேன்'' என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவியும், மேல் மாகாணமுதலமைச்சருமானசந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்திருப்பினும், பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினை விடயத்தில் தெளிவாகக் கருத்துக் கூறத் தயாராக இல்லை. பொதுஜன ஐக்கிய முன்னணியால் ''சீரான பொருளாதார சமூக ரீதியான நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்துவதே எமது தீர்வுத் திட்டத்தின் ஒரு பகுதி'' என மட்டுமே கூற முடிந்துள்ளது.

இதே சமயம் சந்திரிகாகுமாரணதுங்கா பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பாக தொலைக்காட்சி மூலம் மேற்கொண்ட தேர்தல் பிரசாரத்தின் போது''ஈழம் என்ற அரசாங்கத்திற்குப் பதிலாக ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலை செய்வதும், வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதற்குப் பதிலாக பிரதேச ரீதியில் சமஷ்டியை ஒத்த தீர்வையும் முன்வைப்பதே எனது நோக்கம்'' எனக் குறிப்பிட்டார்.

அதாவது பொதுஜனமுன்னணியின் தேர்தல் அறிவிப்பானது, யுத்தம் செய்வோம் என்று மட்டும் கூறவில்லையே தவிர இனப்பிரச்சினைக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு எதையும் கூறவில்லை. அவ்வாறு தீர்வு கூறப்படாதபட்சத்தில் பொது ஜன முன்னணி ஆட்சிக்கு வந்தால் எதைச் செய்யப்போகின்றது? போரையா? பேச்சுவார்த்தையையா?

## தயாரிப்பு வேலையில் இராணுவம்

சிறிலங்கா இராணுவம் இன்று பெரும் தாக்குதலுக்குத் தன்னை தயார் செய்து கொண்டுள்ளது. கடந்த ஆண்டின் இறுதியில் பூநகரியில் ஏற்பட்ட தோல்வியுடன், பெரும் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொண்ட இராணுவம் பெரியளவில் செய்த ஆயுதக் கொள்வனவுடன் யுத்தத்திற்கு தயாராகியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் அளவிலேயே இராணுவம் பெரும் படையெடுப்பிற்குத் தயாராக இருந்த போதும் தென்மாகாண சபைத் தேர்தலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரசியல் நெருக்கடிகளும் தாக்குதலுக்கான உத்தரவை டி.பி. விஜேதுங்கா தள்ளிவைக்க வேண்டிவந்தது. இதனைத் தொடர்ந்து திடீரென பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையும், அதைத்தொடர்ந்து அறிவிக்கப்பட்ட பொதுத்தேர்தலும், மேலும் பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஒத்தி வைக்கும் நிலையை ஏற்படுத்தியது.

இவ் ஒத்திவைப்பிற்கு பல காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஒன்று பெரும் தாக்குதல்களினால் இராணுவத்தினரும் பெருந்தொகையில் இறக்க வேண்டிவரும். இதனால் தென்னிலங்கை அரசியலில் குழப்பமான நிலை ஏற்படும். இது ஐ. தே. கட்சித் தேர்தல் வெற்றியைப் பெரிதும் பாதிப்படையச் செய்யக்கூடியதாகும்.

அடுத்ததாக யுத்தத்தில் பெருமளவில் தமிழர்கள் கொல்லப்படும் நிலை உருவாகலாம். இது சர்வதேசங்களின் கண்டனங்களுக்கு உள்ளாக வேண்டி வருவதோடு, வெளி மாவட்டங்களில் உள்ள தமிழர்களின் ஆதரவும் ஐ. தே. கட்சிக்குக் கிடைக்காது போகலாம் கிட்டாது போகலாம்.

இந்நிலையில் தேர்தல் காலத்தில், பெரும் தாக்குதல் நடத்துவதை ஐ.தே.க. தலைமைபீடம் விரும்பவில்லை. ஆனால், தேர்தல் காலத்தில் இராணுவ நடவடிக்கைகளை முற்றாக நிறுத்திவிடவும் அரசாங்கம் எத்தணிக்க முயற்சிக்கவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கி உள்ளது.

## போர்முறைத் திட்டம்

ஆனால், இம்மட்டு ப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை என்பது, சிறிலங்காஇராணுவத் தரப்பின் ஒரு தெளிவான போர் முறைத்திட்டத்தின் அம்சம் என்பதே இங்கு முக்கியமான விடயமாகும்.

சிறிலங்கா இராணுவத் தரப்பு பெருமளவு ஆயுதத்தளபாடக் கொள்வனவு, இராணுவ விரிவாக்கம் என்பனவற்றை மேற்கொண்டபோதும் வடக்கில் புலிகளை பலவீனப்படுத்தல் என்பது தொடர்பான தெளிவான கொள்கை ஒன்றை பின்பற்ற முடியாத நிலையிலேயே இருந்து வந்துள்ளது.

இதில் அதிகாரிகள் மட்டத்தில் கருத்து முரண்பாடுகளும் உள்ளன. கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகளும் இது தொடர்பாக விமர்சித்திருந்தன. இதில், முக்கிய பிரச்சினையாகும்.

விடுதலைப் புலிகள் மீதான அழுத்தத்தை வன்னியில் இருந்து தொடுப்பதா அன்றி யாழ்- குடாநாட்டைக் கைப்பற்றுவதன் மூலம் தொடுப்பதா என்பதே ஆகும்

யாழ்ப்பாண குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் பாரியபடையெடுப்பு மூலம் விடுதலைப் புலிகளுக்குப் பெரும், உயிரிழப்பை ஏற்படுத்துவதோடு, யாழ். நகரை கைப்பற்றுவதே சிறிலங்கா இராணுவத் தரப்பில் பெருமளவுவிரும் பப்படுவதாகும். கடந்த காலத்திலும் இதற்கான திட்டங்கள் இடப்பட்டதோடு முயற்சிகளும் மேற்கொள்ளவும் பட்டது.

ஆனால் யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதல், ஏற்படக் கூடிய இழப்புக்களும் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றி பாதுகாக்க முடியுமா? என்ற கேள்வியும் இராணுவத்தரப்பில் பலமாகவே உள்ளது, இதற்கு ஒப்பரேசன் லிபரேசன் தோல்வியில் முடிவுற்றதும், இந்திய இராணுவத்தின் அனுபவமும் அவர்களுக்கு முன்னுதாரணங்களாக இருந்தன.

இதே சமயம் வன்னியில், பெரும் பிரதேசங்களைக் கைப்பற்றுவதன் மூலம், புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளபகுதியை சுருக்கி, அவர்களுக்கு நெருக்கடி கொடுக்கும் முயற்சியாகும் இம் முயற்சியானது, ஒப்பீட்டு ரீதியில் பெருமளவு உயிரிழப்பும் பொருளிழப்பும் அற்றதாகும். அத்தோடு, யாழ். குடாநாட்டிலும் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க முயலும் போது புலிகள் பலவீனப்படுவார்கள் என்பது கணிப்பீடாகும்.

இவ்வகையான போர்முறைத்திட்டமாகவே வன்னியில் மன்னார் வீதி வழியாக அண்மையில் இராணுவம் வெளியேறி பூவரசங்குளம் பகுதிவரை வந்தமையும், நேற்று பண்டத்தரிப்புப் பகுதியில், வெளியேறியதையும் கொள்ள முடியும். அதாவது வன்னியில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின்அளவை குறைப்பதுடன் போக்குவரத்துப் பாதைகளைக் கட்டுப்படுத்துவதும், இதன் மூலம் விநியோகத்தைப் பாதிப் படையச் செய்வதும் ஒரு பகுதியாக நடைபெற யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு புலிகளுக்கு நெருக்குதல் கொடுத்தலாகும்.

இந்தவகை இன்றைய அரசியற் சூழ் நிலைக்கும் இராணுவச் செயற்பாட்டிற்கும் பொருத்தமான ஒரு அணுகுமுறையாகவே உள்ளது. அதாவது, இன்று தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையில், பெரும் தாக்குதல்கள் இழப்புக்கள் இன்றி போர்த் திட்டத்தைநகர்த்திச் செல்வதற்குஇது மிகவும் ஏற்றதாகும்.

இந்த நிலையில், சிறிலங்காவின் பாராளுமன்றத் தேர்தலானது சிறிலங்கா இராணுவத்தின் போர் முறைத் திட்டத்தை நிறுத்தி விட்டது. என்றோ அல்லது முற்றாக மாற்றியமைத்து விட்டதென்றோ அல்லது பாராளுமன்றத் தேர்தல் இனப்பிரச்சினைக்குப் புதியதொரு தீர்வைக் கொண்டுவரும் என்றோ எவரும் எதிர்பார்ப்பது தவறாகும்,

இதேசமயம் சிறிலங்கா இராணுவத்திற்கு இன்று போருக்கு மட்டுமல்ல, தேர்தலை நடத்தி முடிக்கவும் பெருமளவு துருப்பினர் தேவை. அதிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திற்கு பெருமளவு தேவை. கொழும்பிலும் தயார் நிலையில் இருப்பதற்குப் பெரும் எண்ணிக்கை ஒன்று தேவையாகிறது. இதன் காரணமாக யாழ் குடாநாட்டில் பெரும் தாக்குதலுக்குப் படைகளைப் பயன்படுத்துதல் தேர்தலுக்கு முன் சாத்தியமானதாக இல்லை. ஆனால், சற்றுக் காலம் தாழ்த்தியாவதுவடக்கில்பெரும்படையெடுப்புஒன்றை நடத்த இராணுவம் முனைப்பானதாகவே உள்ளது.

இந்நிலையில் தேர்தலின் முடிவில் யார் வெற்றி பெற்றாலும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே முன்னெடுக்கப்படக் கூடிய சூழ்நிலையே உள்ளது. சில சமயம் பொதுஜன ஐக்கிய முன்னணி யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்த முயற்சிக்கலாம். ஆனால் அது எதுவரையும் என்பதே கேள்வியாகும்.

ஏனெனில் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தமிழர் தரப்பினருக்கு சிங்களக் கட்சிகள் வாக்குறுதிகள் எதையும் அளித்துவிடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாக ஏற்கனவே பௌத்த பீடங்கள் தமிழர் விவகாரத்தில் எதுவித வாக்குறுதிகளையும் அளிக்கக் கூடாது என சிங்களகட்சிகளை எச்சரித்துள்ளதோடு, இனப்பிரச்சினை விடயத்தில் அவர்களின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து விளக்கமளிக்குமாறும் கோரியுள்ளது.

மேலும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதை தேர்தல்விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியுள்ள ஐ. தே. கட்சியும் அரசியல் தீர்வுஇல்லாது விடினும், யுத்தநிறுத்தம் போன்ற தொன்றைத்தானும் தொடர்ச்சியாக அமுல்படுத்த அனுமதிக்கப் போவதில்லை. அத்தோடு போர்க்காலத்தில் பெரும் சலுகைகளையும், பெருந்தொகை கமிசன்களையும் பெற்று

**ஜெயராஜ்**

சுகபோகங்களை அனுபவித்து பழகிவிட்ட இராணுவ உயர்அதிகாரிகளும் யுத்தமின்றி இருப்பதை அனுமதிக்கப் போவதில்லை.

இந் நிலையானது, வேறுயார் விரும்பியென்ன விரும்பாவிட்டால் என்ன இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்விற்கே சிறிலங்கா அரசை இட்டுச் செல்லும் என்பதே இன்றைய அரசியலின் வெளிப்பாடாகவுள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால் சிறிலங்கா அரசிடம் இருந்து இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை எதிர்பார்த்திருக்க முடியாது.

# இந்தியாவில் இருந்து ஒரு சல்மான் ருஷ்டி பங்காளதேஷிலிருந்து ஒரு தஸ்லிமா நஸ்ரீன்

சாத்தானின் கவிதைகள் எனும் புத்தகத்தை எழுதிய தன் மூலம் பிரச்சினைகளுக்குள்ளான பிரிட்டிஷ் பிரஜையான இந்தியாவைச் சேர்ந்த சல்மான் ருஷ்டிக்கு, அடுத்து இன்று உலகில் அனைவரின் கவனங்களையும் ஈர்த்துள்ளதோடு முஸ்லிம் சமூகத்தினரை கொதிப்படைய செய்துள்ளவர் 32 வயது வங்காளதேச பெண் கவிஞர் தஸ்லிமா நஸ்ரீன்.

வங்காளத்திலும் இந்தியாவிலும் எழுத்துலகில் தனக்கென்று தனிமுத்திரைபதித்து ஆராய்ச்சிப்பட்டங்களோ கல்வியாளர்களுக்குரிய பகட்டோ இல்லாது தன் அனுபவத்தில் கண்டதை இயல்பாக எழுதி வரும் தஸ்லிமா ஓர் மருத்துவராவார். இவரது படைப்புக்களை வாசிக்கும் ஒருவர், வங்கமொழி எவ்வளவு வளமும் பலமும் பொருந்தியது என்பதை அவர் அம்மொழியைக் கையாண்டுள்ள விதத்தைக் கொண்டு உணர்ந்து கொள்ள முடியும். அதனால் தான் என்னவோ பள்ளி மாணவர் முதல் பல்கலைக்கழக பேராசிரியர் வரை இவரது படைப்புக்களை படிப்பதுடன் பாராட்டியும்வருகின்றனர்.

கவிஞரும், கட்டுரையாளரும், கதாசிரியருமான நஸ்ரீன் தம்முடைய 'நிர்பச்சித்தா காலம்ன்' ηirbachita Column) 'லஜ்ஜா' (Lajja) என்ற இரண்டு படைப்புக்களுக்காக அந்நாட்டில் உள்ள முஸ்லிம் பழமைவாதிகளாலும், பிற்போக்கு எண்ணங்கொண்ட சில முஸ்லிம் இளைஞர்களாலும் கடுமையான குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளார். தொடக்க காலத்தில் அவர் பல்வேறு இதழ்களில் எழுதி வெளிவந்த படைப்புக்களின் தொகுப்பே நிர்பச்சித்தா காலம்ன் ஆகும். இத்தொகுதியில் உள்ள அவரது படைப்புக்கள் இஸ்லாம் மதத்தின் ஒழுகலாறுகளையும் அம்மக்களின் வாழ்க்கை முறைமைகளையும் மதத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றையும் அவர்களின் இறைதூதரைப் பற்றியும் இருக்கின்ற நிலைக்கு மாறாக தவறான விளக்கங்களை அளிக்கின்றன என்று முஸ்லிம் பழமை வாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர் இதன்போது தஸ்லிமாவின் தலைக்கு பலர் விலை பேசினர். பின்பு நாளடைவில் இந்தப் பிரச்சினை தணிந்து காணப்பட்டது.

சமீபத்தில் கல்கத்தா ஸ்டேஸ்மன் பத்திரிகைக்கு இவர் அளித்த பேட்டியில் இஸ்லாம் சமயம் பற்றி அவர்கூறிய கருத்துக்களும் மதவாதிகளின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளதுடன் பிரச்சினையைத் தீவிரமாக்கியுமுள்ளது.

முஸ்லிம்களின் புனித நூலான குர் ஆனில் சஷரியத் சட்டம் பற்றிய சிலவிதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்று தஸ்லிமா கோரியதாக பேட்டி அமைந்திருந்தது. இதுவே முஸ்லிம்களிடையேபெரும்கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. முஸ்லிம் மதத்தைப் புண்படுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ள தஸ்லிமா நஸ்ரீனை கைது செய்து தூக்கிலிட வேண்டுமென்று வங்காளதேச முஸ்லிம்கள் போர்க்கொடி பிடித்துள்ளனர்.

ஜமாத்-இ-இஸ்லாமி என்ற அமைப்பு நஸ்ரீனை தூக்கிலிட வேண்டுமென்று கோரி டாக்காவில் ஊர்வலமே நடத்தியது. குல்னா நகரைச்சேர்ந்த மவுலவி முப்திசையத் நூருல் இஸ்லாம் என்பவர் நஸ்ரீனை கொல்பவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் பரிசு தருவதாகவும் அறிவித்திருக்கிறார்.

**தொகுப்பு: சசிகரன்**

தான் அளித்த பேட்டியை கல்கத்தா பத்திரிகை திரித்து எழுதிவிட்டதாக தஸ்லிமா கூறிவிட்ட போதிலும் பிரச்சினை தீர்ந்ததாக இல்லை.

பெண்கள் மதத்தின் பெயரால் ஒடுக்கப்படுதல், பெண்கள் மீது நிகழும் பாலியல் ரீதியான அடக்குமுறை, வன்முறை, ஆண், பெண் உறவு நிலை இவற்றை உள்ளடக்கமாகக் கொண்டே இவரது படைப்புக்களில் பெரும்பாலானவை வெளி வந்தன.

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஆனந்த பசார்' பத்திரிகை நிறுவனம் 'நிர்பச்சித்தா காலம்ன்' என்ற இத்தொகுதிக்காக மதிப்புமிக்க 'ஆனந்த புரஸ்கார்' விருதினை இவருக்கு வழங்கியது. வங்கதேச எழுத்தாளர்களில் முதன்முதலில் இவ்விருதினைப் பெற்றவர் இவரே. இவ்விருது இவருக்குக் கிடைத்ததும் மதவாதிகளுக்குஇவர் மேல் மேலும் எதிர்ப்புணர்வு அதிகரித்தது. 'அந்த நூலுக்காக அவருக்கு விருது அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த நூலும் அதற்கு அளிக்கப்பட்ட விருதும் முஸ்லிம் மதத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட சதி என்றே அவர்கள் கருதுகின்றனர்.

அண்மையில் வெளியான அவரது படைப்பு 'லஜ்ஜா' வெட்கம் என்ற நூலாகும். இதில் வங்கதேசத்தில்சிறுபான்மையினரான இந்துக்கள் பெரும்பான்மையினரால் எவ்வாறு அடக்குமுறைக்குட்படுகின்றனர் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார். இந்நூலில் அவர் வாழ்ந்த, வாழ்கின்ற அறிஞர்களின், அரசியல் தலைவர்களின் கருத்துக்களையும், வரலாற்று நிகழ்வுகளையும், சில முக்கிய தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு, சிறுபான்மையினரை அவர்கள் எவ்வாறு பயமுறுத்தியும் அடக்குமுறைக்குட்படுத்தியும் சுரண்டியும் வாழ்வதோடு நாட்டை விட்டுத் துரத்துவதற்கான முயற்சியையும் மேற்கொண்டனர் என்பதை கூறியுள்ளார்.

1992 டிசம்பர் 6 இல் நடந்த பாபர் மசூதி தகர்ப்பிற்குப் பின் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த இந்துக்கள் கொடூரமான முறையில் பழி வாங்கப்பட்டனர். இதன் போது 'மாயா' என்ற பெண் முஸ்லிம்களால் கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டபின் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டாள் என்ற உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து எழுதப்பட்டதே இந்த ''வெட்கம்' என்ற நாவலாகும்.

மரணத்தின் விளிம்பில் சிக்கித் தவிக்கும் தஸ்லிமா இது குறித்து கருத்து வெளியிடுகையில்பெண்கள்நிலை என் கவனத்தை ஈர்த்ததானது நான் சிறுமியாக இருந்த காலத்திலிருந்தே தொடங்கியது. ஆண் பெண் பேதம் பற்றி முதலில் என் குடும்பத்திலேயே அறிந்தேன். பையன்களுக்கு முக்கியத்துவமும் பெண்பிள்ளைகளுக்கு பாராமுகமும் காட்டும் வழக்கம் எனக்குப் பிடிக்கவில்லை. கல்வியைப் பொறுத்தவரை பெண்களுக்கு அது அவசியமில்லை என்றும் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தால்போதும், அது அவள் தனது கணவனுக்குக் கடிதம் எழுத உதவும் என்றும் மற்றபடி அவள் குர்ஆனை ஓதப் பழகிக் கொண்டால் போதும் என்ற கருத்து எனக்கு உடன்பாடானதல்ல அதனையும் மீறி அவளுக்கு கல்வி தந்தால் அவள் நல்ல இடத்தில் மணமுடிக்க வாய்ப்பாகும் என்ற நினைப்பில்தான் படிக்கவைக்கிறார்கள் அப்படியானால் ஒரு பெண்ணின் இலட்சியமே திருமணம்தானா?

ஆண், பெண் பேதத்தை எதிர்த்து பள்ளியில் இருக்கும் போதே 15 வயதில் 1977 இல் எழுதத் தொடங்கினேன் நான் மருத்துவராகத் தொழில் "புரியத் துவங்கிய காலத்தில் எனது இக் கருத்துக்கள் மேலும் வலுப்பெற்றன.

'பெண்களின் சமூக, சமய பெறுமானங்களினைப் பாதுகாக்கும் விதமாக, பங்களாதேஷின் வயது வந்த பெண்கள் அனைவரும் அணியும் சேலைகளின் அளவு 5.5 மீற்றர்களாய் இருத்தல் வேண்டும். இந்த அறிவித்தல் விடுவிக்கப்பட்டு வரும் ஏழு நாட்களுக்குள் அனைத்துப் பெண்களும் இதை நடைமுறைப் படுத்தல் வேண்டும். இந்த அறிவிப்பை எதிர்ப்பவர்களும் மறுப்பவர்களும் சட்டப்படி குற்றவாளிகள் ஆகின்றனர்'' என்ற அரசின் அறிவிப்பு அண்மையில் வெளியானது.

ஏற்கனவே ஆபத்தான நிலையிலிருந்த பெண்களின் சமூக, சமய பெறுமானங்கள் அவர்களின் சேலையின் நீள அகலத்தை வரையறை செய்யும் இந்த முறையினால் மேலும் மோசமாகியுள்ளது. ஒரு சேலையின் அளவினையும் அதன் நிறத்தையும் நிர்ணயிப்பது அதை அணியும் பெண்களின் அளவும், அவளது விருப்பமும், அவளது பணப்பையிலுள்ள பணமுந்தான் சேலையினை அளவுகோலாகக் கொண்டு பெண்களை அளவிடமுனைவது அவமதிப்பு மட்டுமல்ல சட்டத்திற்கும் முரணானது. இது இந்நாட்டைச் சேர்ந்த பல பெண்கள் ஒரு சேலையை மூன்றாக வெட்டி மூன்று சேலைகளாக்கிப் பாவிக்கும் நிலையில் உள்ளவர்கள். உடுத்த உடுப்பிற்கு மாற்றுடையின்றி இரந்து வேண்டி மானத்தை மறைக்கின்றனர். இந் நிலையில் அரசின் இவ் அறிவிப்பானது வேடிக்கையானதும் வேதனைக்குரியதுமாகும்.

இரண்டாவது தடவையாக முஸ்லிம் புத்தி ஜீவிகளினாலும் தலைவர்களினாலும் எனக்கு மரணம் முன்மொழியப்பட்டுள்ளது.'சாத்தானின் செய்யுள்'' நாவலிற்காக சல்மன் ருஷ்டிக்கு மரணதண்டனை வழங்கப்பட்ட போது அவரின் உரிமைக்காக குரல் கொடுத்ததற்காய்முதன்முறையாக எச்சரிக்கப்பட்டேன். 'பர்தா' விற்கு எதிரானவள் என்று இப்பொழுது இரண்டாவது தடவையாக மரணத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளேன். எனக்குத் தெரியும் ஒரு நாள் அவர்கள் என்னை

(11ஆம் பக்கம் பார்க்க)

## 3-ஆம் ஆண்டு நினைவாக



## மேஜர் ரெட்ணராஜ்(ரெட்டி)

**(தம்பிப்பிள்ளை அந்தோனிதாசன்)**

**மருத்துவமனை வீதி, மன்னார்.**

| பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 10-02-1970 | 22-07-1991 |

பாயும் புலிகளின் அணியினில் வந்தவன்
'ரெட்டி' என்றொரு பெயரைப் பெற்றவன்
'பூ'வும் தோற்றிடும் நெஞ்சம் கொண்டவன்

காலம் தந்த தலைவனோடு இருந்தவன்
களத்திலும் ஆடி, மேடைக்களத்தினிலும் ஆடிய
கலைஞனாயிருந்தவன்
வேளை வந்ததும் வித்தாகிப்போனான்
தமிழீழ மண்ணில் என்றென்றும் வாழ்வான்.

- நண்பர்கள்.

(சி-9968)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



## வீரவேங்கை முத்து

**(தெய்வேந்திரம் மகேந்திரன்)**

காரைநகர்

| பெற்ற அன்னையின் மடியில் முத்தாக மலர்ந்தது: | தமிழீழ மண்ணின் விடிவிற்காக வித்தாக விதைத்து: |
| --- | --- |
| 27 - 12 - 1969 | 22 - 07 - 1990 |

ஆண்டு நான்கு ஆனதடா முத்து-இன்னும் அழியவில்லையடா உனது நினைவு. இந்திய அரச படையை எதிர்த்து நீ அடி எடுத்து வைத்தாய். முரசு மோட்டை தனிலே சிறிலங்கா இராணுவத்தை வேரோடு சாய்த்தாய் .மார்பினிலே குண்டேந்தி நீ மாவீரன் ஆனாலும் இந்த மண்ணிலே நீ பதித்த கால்தடங்கள்தெரியுதடா மறக்கவில்லை உன்நாமம். மறையவில்லை உன் துயரம்.

22-07-1990 அன்று முரசுமோட்டையில் நடந்த நேரடி மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

த. முகவரி:
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

இங்ஙனம்
- குடும்பத்தினர்.

(8888)

# பொருள்கள் தடைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய யோசனை

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம்நீக்கப்படும், பொருள்களை வட பகுதிக்குள் கொண்டு செல்ல தடைசெய்யப்பட்டிருப்பது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க தமிழ் அரசியல் வட்டாரங்கள் ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

இத்தடை தொடர்வது தொடர்பாக மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்வது பற்றி ஆராய்ந்து வருவதாக இவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வர்த்தக நோக்கில் இல்லாவிட்டாலும், மக்கள் தங்கள் தேவைகளுக்காகவாவது பொருட்களை கட்டுப்பாடின்றி கொண்டு செல்ல வழிவகுக்க, சூழ்நிலை உருவாக்குமாறும் இவ் வட்டாரங்கள் கேட்டுள்ளன.

இதேவேளை அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தபோது செயற்பட்டு வந்த இளைஞர்கள் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள், அத்தியாவசியசேவைகள் ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றின் செயற்பாடுகள் குறித்தும் தெளிவற்ற ஓர் நிலையே நிலவுவதாக தெரியவருகிறது.

## 6 இந்திய மீனவர் கடற்படையால் கைது

(கொழும்பு)

தமிழக மீனவர்கள்மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் காயமடைந்ததுடன் ஆறுபேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

### பொதுஜன

முன்னணியின் வெற்றிக்கன காரணங்களாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, இளைஞர்கள் கொலை, காணாமல் போனவர்கள் விவகாரம், ஊழல், வீண்விரயம் என்பன இருப்பதாக அவ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவது அமைவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை ஏனைய உதிரிக்கட்சிகள் ஆசனங்களைக் கைப்பற்றும் வாய்ப்புகள் அருகிவருவதாக அவர்கள் மேலும் கூறினர்.

### ஷெல்

களை நோக்கி எறிகணைத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் வயோதிபர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். மேலும் பெண்கள், குழந்தைகள் உட்பட பன்னிரண்டு பேர் எறிகணை வீழ்ந்து வெடித்துச் சிதறியதில் படுகாயமடைந்தனர்.

பலியானவர் விபரம் வருமாறு: தம்பு- துரைராசா (வயது 62) பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

காயமடைந்தவர்கள் விபரங்கள் வருமாறு: ராசு ரவிச்சந்திரன் (26) பிரான்பற்று, ராசு- ஜெயமலர் (08) பிரான்பற்று, தனபாலசிங்கம் - நாகரெத்தினம் (38) பண்டத்தரிப்பு, ஜெயம் - சிவசக்தி (40) பனிப்புலம், ஜே. ஜென்சி (11), ஜே. தனுசி (09) (இவர்கள் இருவரும்சகோதரிகள்ஆவர்.) பண்டத்தரிப்பு, பொன்னுத்துரை கண்மணி (65) பண்டத்தரிப்பு, ரீ. நாகம்மா (40) பண்டத்தரிப்பு. கே. பவளராணி (37). கே கிரிஜா (13), கே. ராஜேஸ்வரி (36) (இவர்கள் பிரான்பற்றைச் சேர்ந்தவர்கள்), நாகலிங்கம் - மாணிக்கவாசகர் (40) வடலியடைப்பு.

இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமடைந்த இவர்கள் அனைவரும் யாழ். மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி), (சி)

## ராணுவ உடையில் சென்று வீடுகளில் கொள்ளை

இராணுவ உடையில் வீட்டினுள் புகுந்து அங்கு இருந்தோரை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி அங்கிருந்த தங்க ஆபரணங்கள், பணம்போன்றவற்றை கொள்ளையடித்த சம்பவமொன்று கலதுருவ அளவைப் பகுதியில் நடந்துள்ளது.

விசாரணை நடத்திய பொலிசார் சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து இராணுவ உடை, கைத்துப்பாக்கி போன்றவற்றைபொலிசார் கைப்பற்றியுள்ளனர்

## உலககோப்பைகிரிக்கட்நடத்த இலங்கை, இந். பாக். முடிவு

(டில்லி)

1996ஆம் ஆண்டுக்கான உலகக் கோப்பை கிரிக்கட் பந்தயங்களை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக நடத்தவுள்ளன.

இவற்றில் இரண்டு அரை இறுதி பந்தயங்கள் உட்பட 17 பந்தயங்களை இந்தியா முன்னின்று நடத்தும் என கல்கத்தாவில் நேற்று அறிவிக்கப்பட்டது.

### இரண்டாவது

டுப் பிள்ளைகளின் தந்தையான சிவசம்பு - தர்மகுலராசா (வயது 40) ஸ்தலத்திலேயே பலியானார். மற்றைய குண்டுகளினால் அதே இடத்தைச் சேர்ந்த எஸ் சுந்தரம் வயது 80), செல்வகுமார் (வயது 18), ரி. பிரேமதாசன் (வயது 24), எம். காந்தரூபி (வயது 34) ஆகியோர் காயமடைந்தனர். ஐந்து வீடுகள் சேதமடைந்துள்ளன.

வல்வெட்டித்துறை காட்டுப் புலம் பகுதியில் வீழ்ந்து வெடித்த குண்டுகளினால் மூன்று வீடுகள் சேதமடைந்தன. இதேவேளை கடற்பரப்பில் நங்கூரமிட்டிருந்த பத்திற்குமேற்பட்ட படகுகள் உலங்குவானூர்தித் தாக்குதலுக்கு இலக்காகி துவாரமடைந்த நிலையில் கடலினுள் மூழ்கின இத்தாக்குதல்களினால் வல்வெட்டித்துறைப் பகுதி வெறிச்சோடிக் காணப்படுவதாக நமது செய்தியாளர் தெரிவிக்கின்றார். (யோ)

### பண்டத்தரிப்பில்

சண்டை மூண்டது காலை சுமார் 6. 30 மணியளவில் தொடங்கிய சண்டை நண்பகல்வரை நீடித்தது.

இம் மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர் ஆயினும் இராணுவத்திற்கேற்பட்ட முழுமையான சேத விபரமும் தெரியவரவில்லை.

இதேசமயம் வெளியேறி வந்த இராணுவத்தினரும் அண்டை முகாம்களில் இருந்த இராணுவத்தினரும், சூழவுள்ள குடியிருப்புக்கள மீது அகோர எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

## கணவனை அதிரடிப்படை தாக்கியதால் மனமுடைந்த பெண் நஞ்சருந்தி தற்கொலை

(மட்டக்களப்பு)

விசேட அதிரடிப்படையினர் தனது கணவனையும் நாலு வயது பிள்ளையையும் தாக்கியதால் மனமுடைந்த குடும்பமாது ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் அக்கரைப்பற்று பனங்காட்டு கிராமத்தில் நடைபெற்றது.

கடந்த ஞாயிறன்று, நடந்த இச்சம்பவத்தில் குமாரவேல் பார்வதி என்ற 34 வயது பெண்ணே தற்கொலை செய்து கொண்டவராவார். இச்சம்பவம்பற்றி பெண்ணினது கணவன் சாட்சியமளிக்கையில், எனது வீட்டிற்கு கடந்த வாரம் வந்த அதிரடிப்படையினர் புலிகளுக்கு உணவு கொடுத்து உபசரிப்பதாக கூறி என்னையும் எனது மகனையும் தாக்கினர். இதனால் எனது மனைவி மிகவும் மனமுடைந்து காணப்பட்டாள். நான் வயலுக்கு சென்று திரும்பிய போது எனது மனைவி நஞ்சருந்திய நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவித்தார்.

### லக்கி

இப்பதவிக்கு இராணுவத் தலைமை அதிகாரி லக்கி அல்கம நியமிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது இவர் முப்படைகளுக்கும் தளபதியான ஜனாதிபதியுடன் நேரடித் தொடர்புடையவராக இருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாராளுமன்ற தேர்தல் நடைபெறும் வரை பெரிய இராணுவ நடவடிக்கை எதுவும் இராது எனக் கூறப்படுகிறது

### கசங்கிய

அவரின் உடையின் கைப் பகுதியில் இரத்தம் கசிந்த அடையாளம் காணப்பட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை மேடைஉடைந்து விழும்போது அமைச்சர்களான கலாநிதி விமால் விக்கிரம சிங்கா, நந்தா மத்தியூ ஆகியோர் ஜனாதிபதியுடன அருகே காணப்பட்டனர் என கூறப்படுகிறது.

### ஒருபோராளி

நடைபெற்ற நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை வண்ணவேல் (இரத்தினம் திருச்செல்வம்-அராலி தெற்கு கொட்டைக்காடு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### வானம்

க்கு வந்ததாகவும் அவரை கண்ட மக்களிடம் உரையாற்றுகையில் இக் கருத்தை தெரிவித்ததாகவும்அங்கு பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறவில்லை என தெரியவருகின்றது.

### பண்டத்தரிப்பு

மாதா கோவிலடி ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்களே மூட்டை முடிச்சுகளுடன் இடம்பெயர்ந்து சென்றவர்களாகும்

இராணுவத்தினர் திரும்பி சென்றுவிட்ட செய்தியறிந்த பொது மக்களில் பலர் மீளத் திரும்பி, தமது வீடுகளை நோக்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது (தி)

### இந்தியாவில்

''அல்லாவே பெரியவர்'' என்ற கோசத்தோடு கொலை செய்வார்கள். அதையிட்டு நான் அஞ்சவில்லை.

வீதியில் இறங்கினால் விபத்தில் அகப்படும் அபாயம் இருக்கிறது என்பதற்காக நான் வீதியில் இறங்கி நடக்காமல் இருப்பதில்லையே. அது போலத்தான் இதுவும் எனக்கு இந்த சமூகத்தில் தான் நான் தொடர்ந்தும் வாழவேண்டும் அது ஒரு புலியைப்போல என்னைப்பிடித்து தின்ன வருகிறது. அது என்மீதான கொலை வெறியை நிறுத்தாது என்று தெரிந்த போதும் நான் வாழத்தான் வேண்டும். வாழத்தான் போகிறேன். தமது பேனாக்களை அநீதியுடன் சமரசம் செய்து கொள்ள மறுப்பவர்கள் என்றும், நியாயத்திற்கான தமது குரலை இன்னமும் முற்றாக மௌனமாக்கிக் கொள்ளாதவர்கள்.

ஒருவேளை, நான் ஒரு பெண்ணாய் பிறந்ததன் பாவத்தை கழுவுவதற்காக என்னை அவர்கள் கொல்வதை அமைதியாய் அனுமதிக்க வேண்டுமோ தெரியவில்லை நான் மரணத்தைச் சந்தித்து விட்டேன். கொடிய இருளையும் பார்த்துவிட்டேன். இருந்தபோதிலும் மேலும் மேலும் நான் வாழ்க்கையை நோக்கிச் சென்றுகொண்டிருகிறேன். நான் ஒரு பெண் அதற்காகப் பெருமைப்படுகிறேன் என்பலத்தையும், நேர்மையையும், தூய்மையையும் நான் நன்கு அறிவேன் என்கிறார் அவர். தற்போது தஸ்லிமா வெளிநாட்டிற்கு தப்பிவிட முடியாதபடி வங்காளதேச அரசு அனைத்து பாதைகளிலும் பலத்த கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்நிலையில் தனக்கு பலத்த எதிர்ப்பு இருப்பதை தொடர்ந்து சர்வதேச பெண்கள் அமைப்பின் ஊடாக தஸ்லிமா அமெரிக்காவிடம் தஞ்சம் கோரியிருப்பதாக நம்பப்படுகிறது.

சல்மான் ருஷ்டி போல் தஸ்லிமாவின் வாழ்வும் தலைமறைவாகிவிட்டது இன்று.

அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றிருக்கக் கூடும் என நம்பப்படும் இவருக்கு இந்தியா மற்றும் மேற்கத்தைய நாடுகள் புகலிடம் அளிக்க முற்பட்டால் இந்நாடுகளுக்கு எதிராக தாம் புனிதப் போர் நடத்தப்போவதாக பங்களாதேஷின் அடிப்படைவாதிகள் பகிரங்க எச்சரிக்கை விடுக்கும் அளவிற்கு சர்ச்சை வளர்ந்து நிற்கிறது.

### மக்களின்

றாக படிப்படியாக ஒரு சமநிலையை சோவியத்திற்கும் சீனாவிற்கும் இடையில் பேணி தனது தற்சார்பு நிலையை வளர்த்துக் கொண்டது. தன்னிறைவான வேளாண்மைத் துறையையும் நன்கு வளர்ந்த கைத்தொழிற் துறையையும் வடகொரியாகொண்டுள்ளது. பல விதமான வாகன உற்பத்திகள், கைத்தொழிற் பொறிகள், உதிரிப் பாகங்கள் மட்டுமல்ல, இன்று அணுவாயுதத் திறன், ஏவுகணைத் தொழிநுட்பத் திறன் எல்லாமே கொண்ட நாடு அது வடகொரியாவின் மிகப் பிந்திய தயாரிப்பான றோடாங் I (Rodong I எனப்படும் 1000 மைல் செல்லக் கூடிய ஏவுகணை பற்றியும் அதில் பொருத்தக் கூடிய அணுவாயுதம் பற்றியுமே இன்று அண்டைநாடுகள் கலக்கமுறுகின்றன.

இருந்தபோதும் 1991பின் சோவியத் உதவிகள் நின்று விட்டன; சலுகைகள் நிரம்பிய கிழக்கைரோப்பிய நாடுகளோடான வணிகத் தொடர்புகள் நின்று போயின; சீனாவோ நண்பனாக இருந்தாலும் பணம் அனுப்பினாலே பண்டம் என்பதால் பாதிப்புக்கள் எல்லாம் வடகொரியாவைப் பாதிக்கின்றன எனவே இத்தகையபாதிப்புக்களினால் தன்னைத் தற்காத்துக் கொள்ளும் கவசமாகவே தனது அணுக்குண்டு தயாரிப்பு செயற்பாட்டை கிம் பாவித்தார் என்றும் கூறப்படுகின்றது. அத்தோடு சீன ஆலோசனைகள், வெளிநாட்டவர் முதலீடுகள் வரையறுக்கப்பட்ட வகையில் அங்கு வரவேற்கப்படுகின்றன சில பகுதிகள் முதலீட்டு வலயமாக்கப்படுகின்றன. கூடிய வணிகத் தொடர்புகள் மேற்குலகோடும் கொள்ள முயலப்படுகின்றன.

கிம் இறந்தபோதும், தனது கொள்கைகளைத் தொடரும் வகையில் தனது மகனை கிம் யோங் கில்லை தயாரித்தே சென்றுள்ளார். இப்படியும் ஒரு நாடு; இப்படியும் ஒரு ஒரு தலைவர்; நாமறியவேண்டிய செய்தியல்லவா? கடந்த செவ்வாய் கிம்மின் புகழுடல் வீதிவலம் வந்தபோது முழு வடகொரிய மக்களும் கதறிக் கதறி அழுத காட்சியை விட வேறு என்ன வகையில் கிம்மின் பூரணத் தன்மையை விளக்கமுடியும்?

### சிறிலங்கா

சிகளும் அதி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சொத்தி உபாலி, தட்ட (மொட்டை) சோமே போன்றோரின் விடுதலைக்காகச் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் சட்டத்தரணி ஒருவர் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளார். ஆகக் குறைந்தது பிணையிலாவது இவர்கள் விடுவிக்கப்படுவதற்கான சட்டபூர்வ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வேளையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா பொலிஸ் மா அதிபருக்குஅனுப்பியுள்ள கடிதம் அர்த்தமுடையதொன்றாகும்.

அக்கடிதத்தில், எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும் என்பது தொடர்பாக அக்கறை காட்டாமல் பொலிசார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பாடுபட வேண்டுமெனவும், இதற்காக ஆவனசெய்யும்படியும்கேட்டுள்ளார். பொது மக்களின் வரிப்பணத்தில் இருந்துதான் பொலிஸ் சேவை நடாத்தப்பட்டுவருவதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், பொலிசார் கட்சிக்காக சேவையாற்றுவதை தவிர்த்து மக்களுக்கானசேவையை வழங்குமாறும்கேட்டுள்ளார்.

இவ் வேண்டுகோள்களை பொலிசார் எந்தளவில் கவனத்தில் கொள்ளப்போகின்றனர் என்பதற்கு எதிர்காலம்தான் பதில் கூறும்.

# 10 ஆண்டுகளுக்கு முன்பே பிரபா ஈழத்தை பெற்றுவிட்டார்

## - சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்கா இந்நாடு பிளவுபடுவதற்கு எக்காரணம் கொண்டும் இடமளிக்கப் போவதில்லை என கூறி வரும் வேளையில், பிரபாகரன் பத்து வருடங்களுக்கு முன்னரே ஈழத்தைப் பெற்றுக் கொண்டார் என சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்.

நிட்டம்புவவில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் பேசுகையில், நாம் எவரும் வவுனியாவுக்கு அப்பால் செல்ல முடியாது. நாம் பதவிக்கு வந்தால் சிங்களவரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வேளையில் சிறுபான்மையினரின் உரிமைகளையும் பெற்றுக் கொடுப்போம் எனக் கூறியுள்ளார்.

## தேர்தல் சுவரொட்டி அகற்றப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு நகரில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் சுவரொட்டிகளும், தொங்கவிடப்பட்டிருந்த கொடிகள் பதாகைகளும் பொலிசாரால் அகற்றப்பட்டு வருகின்றன.

சுவரொட்டிகள் ஒட்டுவது, தேர்தல் சட்டத்துக்கு விரோதமானது என தேர்தல் ஆணையாளர் அறிவித்ததையடுத்தே, இவ்வாறு சுவரொட்டிகளும், பதாகைகளும் அகற்றப்படுவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜூன்மாதம் 05-ம் திகதி இடம்பெறற தவறுதலான வெடிவிபத்தில், விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை புக்கரன்/விஜி (ஜெயராம் ஜெயசீலன், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



வீரவேங்கை புக்கரன்
(விஜி)

## தொண்டா - அஷ்ரப் தீர்வு புலிகள் பரிசீலிக்கவேண்டும்

### முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

தொண்டமான் - அஷ்ரப் யோசனையை புலிகள் பரிசீலனை செய்ய வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள்பூரணமானவையல்ல. இவை அதிகாரப் பரவலாக்கலை காட்டும் குறியீடுகள் மட்டுமே என முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டமானும், அஷ்ரப்பும் எதிரெதிர் அணிகளில் இருந்தாலும் தீர்வுக்கான அழுத்தங்களில் முழுப்பலத்தையும் பிரயோகிக்க முடியும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விமான படையை சேர்ந்தவர் கத்தியால் குத்திக் கொலை

(வவுனியா)

வாய்த் தர்க்கம் ஏற்பட்டதையடுத்து விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் வவுனியாவிற்கு அருகேயுள்ள தோணிக்கல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மரணமானவரின் உடலில் பத்து கத்திக் குத்துக் காயங்கள் காணப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

## நாளை தபால் விநியோகம்

(வடமராட்சி)

பருத்தித்துறைக்கு வந்த 'மாகோ' கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்கு 205 தபால் பொதிகள் வந்துள்ளன. இத்தபால் பொதிகள் தபால் அதிகாரிகளினால் நேற்று இறக்கப்பட்டன.

நாளை சனிக்கிழமை முதல் தபால் விநியோகிக்கப்படும்.

(யோ)

## பரீட்சை அனுமதி அட்டை

1994-08-01-ம் திகதி முதல் நடைபெறவிருக்கும் க. பொ. த. (உ/த) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன் தினம் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றது. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் இடப்பட்டுள்ளன என்றும் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

## வால் வெள்ளி

தன ஜெயரத்தின தகவல் தருகையில் இந்தச் சம்பவத்தை உலகின் வேறு எந்தப் பிராந்தியத்திலும் கண்டிருக்க முடியாது என்று கூறினார்.

### 20 வருடங்களுக்கு முன் இறந்தவரை

## இரண்டுவருடங்களுக்கு முன் சந்தித்த வேட்பாளர்

பொதுத்தேர்தலில்போட்டியிடும் வேட்பாளர்கள் பழைய உறவுகளைக் கூறி, தென்பகுதியில் வாக்கு வேட்டையாடி வருகின்றனர்.

அண்மையில் ஹிங்குரான பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்று 20 வருடங்களுக்கு முன் இறந்த ஒருவரது பெயரைக் கூப்பிட்டுச் சென்றார்கள்.

வீட்டிலிருந்தவர்கள் அதிர்ச்சியடைந்து, யார் என வேட்பாளரை வினவியபோது, இறந்தவர் தனது நெருங்கிய நண்பர் என்றும், சந்தித்து 2, 3 வருடங்களாகிவிட்டது, எப்படி சுகம், எங்கே அவர் என குசலம் விசாரித்தாராம்.

2, 3 வருடங்களுக்கு முன் எங்கு சந்தித்தீர்கள் என வீட்டுக்காரர்கள் வினவியபோது, அவரது வேலை காரணமாக இருவரும் ஒன்றாக கொழும்புக்கு போனதாகக் கூறினாராம் அவ்வேட்பாளர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-07-22

#### வெள்ளி இரவு

08-01- கலைமஞ்சரி - முதலில் நூல் அறிமுகம் அறிமுகமாவது ''உலக உலா'' சஞ்சிகையின் ஜூன், ஜூலை மாத வெளியீடு, அடுத்து சிறுகதை -''ஓ......மனிதர்களே'' சிறுகதையை அடுத்து கவிதைகள்.
1. ஒளியை நோக்கி
2. சமுதாய ஏட்டிலோர் சாதனை பதிப்போம்.

08-30 - செய்திகள்.
08-40 - அரசியல் அரங்கம் ''இன்னமும் கலையாத ஏகாதிபத்தியக் கனவுகள்.
08-50 - வாத்திய கானங்கள்.''

### 1994-07-23

#### சனி காலை

07-02 - மாவீர வணக்கம்
07-15 - நீங்கள்கேட்டவை
07-30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்.
07-40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## எம்பிலிப்பிட்டிய சம்பவம் சில தீய சக்திகளின் சதி

### ஐ.தே.க. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

எம்பிலிப்பிட்டியவில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய கட்சியின் பிரசார கூட்டம் குழப்பப்பட்டமை சில தீயசக்திகளினால் செய்யப்பட்ட திட்டமிட்ட சதிமுயற்சி என கட்சியின் பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில்இக்கருத்தை தெரிவித்த அவர் இதுதொடர்பாக பல தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் தற்போது விசேட இரகசிய பொலிஸாரைக்கொண்ட தூதுக்குழுவொன்று அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### மகேஸ்வரன் துஸ்யந்தி

மலர்வு: 1988-11-21

உதிர்வு: 1993-07-22

ஆறாத்துயரில் மீழாது ஆழ்த்திவிட்டு எம்மையெல்லாம் தவிக்க விட்டுச் சென்ற செல்வமே பேபி மறைந்துதான் ஓராண்டு ஆனதே அன்றி எம் இதயங்களை விட்டு அகலவில்லையே. உன் நிழல் தேடி அலைகின்றோம் கிடைக்குமா? உன் சந்நிதி.

உன் பிரிவால் துயருறும்

மனோ இல்லம், பெற்றோர், சகோதரிகள்,
தலைமேடை, மாமன்மார், அத்தைமார்,
அல்வாய் மேற்கு, மைத்துன, மைத்துனிமார்,
அல்வாய். (8894) உற்றார், உறவினர்.

யாழ். ஸ்ரீதரில்
தினசரி 4. 00 மணி
உயிராயுதம்
தினசரி 6. 00 மணி
சனி, ஞாயிறு 10.30, 6. 00 மணி
JURASSIC PARK
(சி-9950)

விற்பனையில் சலுகை

சகலவிதமான
★ பணிக்கூடு பற்றரிகள்
★ சார்ஜர் பற்றரிகள்
★ வீடியோ ஹெட் (Video head)
என்பன துரித கதியில் விற்பனையாகின்றன.

தொடர்புகட்கு:

★ மின்வளம் ★

இல 81, லெப். கேணல் சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
தொலைக்காட்சி பெட்டிகள், வீடியோ டெக், ஓடியோ செற் வகைகள் நல்ல விலைகொடுத்து கொள்வனவு செய்யப்படும்.

(சி-9946)

லெப். இளஞ்செழியன் நினைவாக..
(மு. வே. யோ. வாஞ்சிநாதன் அரவிந்தன்)
22-07-94

அரவிந்தனே!
அழகானவனே
ஆளுமை கொண்டவனே
அண்ணன் வழியில் இணைந்தவனே
ஆனையிறவிலே ஆண்மையுடன் களமாடியவனே
ஆனையிறவிலே மண்ணுக்காக மக்களுக்காக
- ஆகுதி யானாயே.

நண்பன்
(8866) கந்தரோடையூர் க. விக்கி.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது